உ

கடவுள் துணை.

வித்வசிரோமணியாகிய

# புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

# புலந்திரன்களவுமாலை.

இஃது

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சிந்தாத்திரிப்பேட்டை

நெல்லுமண்டி

வெங்கட்டராமமுதலியாரவர்கள்

குமாரராகிய

கேசவமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி௵ - தைமீ.

மோப்பேர் - சாமிநாயக்கர்வீதியில், நெம்பர்-௫௯

உ

சிவமயம்.

# புலந்திரன் களவுமாலை.

(விநாயகர் துதி.)

அத்திமுகத்தோனே-அரனார் திருமகனே ... *
சத்திக்கணபதியே-சங்கரனார் புத்திரனே ...*
பானைவயிற்றோனே-பழமேந்துங்கையோனே ... *
ஆனைமுகத்தோனே-ஐங்கரனே முன்னடவாய் .. ...*
வேலவற்குமுன்பிறந்த-வித்தைக்களஞ்சியமே ... *
மூலமுதலே-முன்னடக்கவேண்டுமையா ... ... *

(சரஸ்வதி துதி.)

நாவிற்சரஸ்வதியே-நான்முகனார்தேவியரோ ... ... *
சதுர்முகனார்தேவியரோ-தாயேசரஸ்வதியே ... ...*
வாக்குவரமருள்வாய்-மறையவனார்தேவியரோ... ... *
நாவுதவறாமல்-நற்கருத்தைத்தாருமம்மாள் ... ...*
இந்தக்கதைதனக்கு-இனிகருத்தைத்தாருமம்மாள் ... *
பூவிலமர்ந்ததொரு-பொற்கொடியேநான்சரணம் ... *
சரணமென்றடிபணிந்தேன்-தற்காக்கவேண்டுமம்மாள் ...*
தப்புகளுண்டாயின்-தாயேயருள்புரிவாய் ... ... *
குற்றமிருந்தாலுங்-கொண்டணைக்கவேண்டுமம்மாள் ... *
புலந்திரனார்கதையுரைக்கப்-புத்திமிகவருளும் ... ...*

(பாண்டியர் பெருமை.)

பட்டணமாம்பட்டணமாம்-மதுராபுரிபட்டணமாம் ... .. *
பட்டணத்தையாளுகிற-பாண்டியராஜாக்கள் ... ... *
மதுராப்பதிதனிலே-மன்னவர்கள்ராஜாக்கள்... ... *
நீதிமனுமுறைகள்-நெறிதவறாப்பாண்டியர்கள் ... ... *
ஆறிலொருகடமை-அரசர்கள்வாங்குவது ... ... *
சொக்கர்வலுமையுண்டு-துரைராஜர்பாண்டியற்கு ... *
மீனாட்சிவலுமையினால்-மேன்மையுடனாண்டிருந்தார் ... *
சக்கரநெறிப்படியே-தரணிதனையாண்டிருந்தார் ... *

(அல்லியரசாணி உற்பத்தி.)

இப்படியாகவே-இருக்கின்ற நாளையிலே ... ... *
ஆறுயிரவர்களும்-அணிதிரளாட்பாண்டியர்கள் ... *
பிள்ளைகளைவேண்டியே-பெருந்தவசுதானிருந்தார் ... *
மைந்தனைவேண்டியே-மகாதவசுதானிருந்தார் ... ... *
சோலைமலருடைய-சொக்கனைநோக்கியேதான் ... *
கால்கள் நடுங்கத்தவம்-கடுந்தவசுதானிருந்தார் ... ... *
சங்கரருமப்போது-தயவாய்மனமிரங்கி ... ... *
அங்கயற்கண்மீனாட்சி-அருளுமிரங்கியேதான் ... ... *
சந்திரர்கள்சூரியர்கள்-சந்திபண்ணும்பொய்கையிலே ... *
செவ்வலரிப்பூவிலே-செல்வம்பிறந்ததுகாண் ... ... *
அல்லிமலரிலே-அவதரித்தாள்பெண்பெருமாள் .. ... ... *
குழந்தையைப்பார்க்கவே-கொற்றவர்கள்ராஜாக்கள் ... *
கண்டுமனமகிழ்ந்தார்-காவலர்கள்ராஜாக்கள் ... ... *
பார்த்துமனமகிழ்ந்தார்-பாண்டியராஜாக்கள் ... ... *
கண்டெடுத்துக்கொண்டுவந்தார்-காவலர்கள்ராஜாக்கள் ... *
வைத்துவளர்த்து-வரிசையுள்ளபெண்கொடிக்கு ... ... *
அல்லியரசாணியென்று-அரசியற்குப்பெயருமிட்டு ... *
நாளொருவண்ணமும்-பொழுதொருமேனியுமாய் ... ... *
வைத்துவளர்த்தார்கள்-வண்டார்கருங்குழலை ... ... *

(அல்லியரசாணியின் பராக்கிரமம்.)

ஏழுவயதாச்சு-இளங்கொடியாள்நாயகிக்கு ... ... *
பாதிஅரசு-பகுதிகொண்டநீண்முகனை ... ... ... *
முடிவிவந்தநீண்முகனை-முந்திமயிர்பிடித்து ... ... *
குடலைப்பிடுங்கியேதான்-கொம்பனையும்மாலையிட்டு .. ... *
பெண்ணரசுபட்டங்கட்டி-பெருக்கமுடன்வாழ்ந்திருந்தாள் ... *
ஆண்காற்றடித்தாலே அதம்பண்ணிப்போட்டிடுவாள் ... *
கண்டவரைக்குத்தியே-கழுவிலேஏற்றிடுவாள் ... ... *
எண்ணவொண்ணாச்சேனையுடன்-எடுத்தாளேமந்திரவாள் ... *
மந்திரவாளெடுத்து-மதயானைபோலெழுந்து ... ... *
எதிர்க்கத்தான்கண்டவரை-எண்ணியேபாராமல் ... ... *
கண்டமுனிராட்சதனைக்-கண்டதுண்டமாக்கிடுவாள் ... *
வடமதுரைநன்றுடும்-வடதேசப்பட்டணமும் ... ... *

ஈழங்கலிங்கதேசம்-இடமுள்ளபட்டணமும் ... ...
முத்துக்கப்பலாயிரமாம்-முளகுகப்பலாயிரமாம் ... ... *
பாக்குப்படுந்துறையும்-பாண்டிவளநாடும்... ... *
இத்தனைநாடுகளும்-இடமுள்ளராச்சியமும் ... ... *
பட்டமுங்கட்டியிவள்-பாருலகையாண்டிருந்தாள் ... *
பத்துவயதாச்சு-பைங்கொடியாள்அல்லியற்கு ... ... ௰
வளர்த்துசமைத்தாள்காண்-மாதுருதுவானாள் ... ... *

[கிருஷ்ணர்-அல்லியை-அருச்சுனனுக்குப்பாரிசெய்யநினைத்தது.]

ஏழுலகையாண்டதொரு-எம்பெருமான்தான்பார்த்து ... *
அல்லிமலரில்-அவதரித்தபெண்பெருமாள் ... ... *
அழகில்மிகுத்ததொரு-அல்லியரசாணியளை ... ... *
திருக்கப்புகழுடைய-தருமராதுதம்பியனை ... ... *
காண்டாவனமெரித்த-காளையென்னும்அருச்சுனற்கு ... *
ஆணழகருக்கும்-அல்லியரசாணியற்கும் ... ... *
இருவரழகுக்கும்-ஏற்குங்காண்வையகத்தில் ... ... *
என்றுசொல்லிமாயவனார்-இயலாகத்தானினைந்து ... *
சோலைமலருடைய சொக்கருமாயவரும் ... ... *
அருளால்மிகுத்ததொரு-அங்கயற்கண்ணயகியும் ... *
தேவாதிதேவருடன்-தென்மதுரைவந்துநின்று ... ... ௰
அடங்கலுந்தானழைத்து-ஆறுயிரவருமாய் ... ... *
பெண்கேட்கவந்தோம்காண்-பேருலகில்ராசாவே ... ... *
பெண்ணைப்பிறந்தாலும்-பிழையில்லாப்பெண்பெருமாள் ... *
நீன்முகனைக்கொன்று-திலையிட்டபெண்பெருமாள் ... *
கூடியவர்தானினைந்து-கொம்பனையைக்கொள்ளுகைக்கு ... *
மதுரைப்பதியாளும்-மன்னவர்கள்பாண்டியரே ... *
மணக்கோலம்வந்தோம்காண்-மன்னவரே இப்பொழுது ... *
என்றிவருரைக்க-இராசமன்னரேதுசொல்வார் ... *
ஆறுயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார் ... *
மந்திரவாளோட-மயிலனையாள்தான்பிறந்தாள் ... *
கண்டவரைக்கொன்று-கழுவிலேயேற்றிவைப்பாள் ... *
அண்டாப்பெருநீலி-ஆர்சொல்லுங்கேளாளே ... *
அப்படிக்கொத்தவளை-அண்டப்பயப்படுவோம் ... *
அவளுக்குகற்றவர்தான்-அர்ச்சுனரேயாகுமென்றார் ... *

[அருச்சுனன்பாம்பு- பெருமாள்பிடாரன்.]

என்றாலேயாகுமென்று-எழுந்திருந்தாரெம்பெருமாள் ... *
ஐந்து தலைநாகம்போல்-அடைவாய்வடிவாகி ... ... *
புண்ணியமூர்த்திப்-பிடாரனைப்போல்வேஷங்கொண்டு ... *
ஆண்காற்றடித்தால்-அதம்பண்ணிப்போட்டிடுவாள் ... *
உங்களாலானபடி-உத்தமரோயாருமென்றார் ... ... *
எழுலகையாண்ட-எம்பெருமான்தான்கேட்டு ... ... *
காண்டாவனமெரித்த-காளையென்னும்அர்ச்சுனனை ... *
மண்ணுளிப்பாம்பு-வகையானசர்ப்பமுடன் ... ... *
வேஷம்உருவெடுத்து-வேறேயுருமாறி ... ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியுடபட்டணத்தில் ... *
தண்ணீர்க்குளத்தருகே-தார்வேந்தர்வந்துநின்று ... *
பொன்பாம்புதன்னைவிட்டுப்-பெருமாளும்ஆட்டிவைத்தார் ... *
ஆயக்குழலூதி-ஆயனுமாட்டிவைத்தார் ... ... *
பாடாதசிந்துகவி-பாடினார்மாயவரும் ... ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியிடதாதியர்கள் ... ... *
பூங்காவனத்திலே-பொய்கையருகாக ... ... *
மாயன்பெருமாளும்-மகாமயக்கந்தான்செய்து ... ... *
மகடிக்சுழலூதி-மன்னவரும்ஆட்டிவைத்தார் ... ... *
ஆட்டினார்நாகமும்-ஆடுதுகாண்அந்நேரம் ... ... *
பாட்டுக்கிசைவாகப்-பாம்புகளாடுதுகாண் ... ... *
தண்ணீர்க்குடமெடுத்துத்-தண்ணீர்க்குவந்தவர்கள் ... *
பாம்பாடும்பாவனையைப்-பைங்கிளிமார்தான்பார்த்து ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியரைத்தெண்டனிட்டு ... *
(நமது) மதுராவளநாட்டில்-வந்துதேநற்பாம்பு ... ... *
தண்ணீர்க்குளத்திலே-தார்குழலேபாடுதென்றார் ... *
பாம்பாடும்பாவனையைப்-பட்டணத்தில்கண்டதில்லை ... *
அந்தஅழகும்-அதிசயமுங்கண்டறியோம் ... ... *
என்றுஅவளுரைக்க-ஏந்திழையுந்தான்கேட்டு ... ... *
அப்படிப்பட்டதொரு-அழகுள்ளநற்பாம்பை ... *
இங்கேயழையுமென்றார்-ஏந்திழையாளல்லியரும் ... *
அப்படியேயோடி-அழைத்துவந்துவிட்டார்கள் ... ... *
பாம்பைத்திறந்துவிட்டார்-பார்வேந்தர்மாயவனார் ... *
மகடிக்குழலூதி-மாயவனாடிநின்றார் ... ... *

பாம்பாடும்பாவனையைப்-பைங்கிளியுந்தான்பார்த்து ... *
மன்னவன்மேல்சிந்தையுமாய்-மயங்கினாள்மங்கையரும் ... *
மாயவனைத்தான்பார்த்து-மயிலனையாள்அல்லியவள் ... *
பாம்பையனுப்புமென்றாள்-பைங்கொடியுந்தன்னருகே ... *
அப்படியேநற்பாம்பு-அவளருகேவந்ததுகாண் ... *
பாம்புமடியேற-பைங்கொடியும்பார்த்திருந்தாள் ... *
முன்னழகும்பின்னழகும்-முதுகில்மட்சரோகைகளும் ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியருந்தான்பார்த்தாள் ... *
காண்டாவனமெரித்த-காளையருச்சுனரும் ... ... *
சொக்குப்பொடிபோட்டார்-தேன்மொழியாளல்லியற்கு ... *
மாதுசவுரியம்போய்-மயங்கினாள்அருச்சுனன்மேல் ... *
மயங்கியெழுந்திருந்து-மாயவனைத்தான்பார்த்து ... *
பாம்பையழையுமென்றாள்-பைங்கொடியாளல்லியரும் ... *
அந்தப்பிடாரன்-அடைவாகப்போனபின்பு ... ... *
அரசாளும்நாயகியாள்- அல்லியருந்தான்பார்த்து ... *
ஆறாயிரவரென்னும்- அணிதிரளாம்பாண்டியர்கள் ... *
தந்தையாசீர்பாதம்- தையலடிபணிந்து ... ... *
தருக்கப்புகழுடைய-தருமருடதம்பியரோ ... *
காண்டாவனமெரித்த- காளையென்னும்அருச்சுனனை ... *
இந்தட்சணமே - இயலாஅழையுங்கள் ... ... *
கலியாணங்கூட்டுமென்றாள்-காரிழைஅல்லியரும் ... *
ஆறாயிரவர் - அணிதிரளாம்பாண்டியர்கள் ... *
வற்றிக்கிடந்த-வருள்பெரியக்காவேரி ... ... *
முட்டப்பெருகியே- கரைபுரண்டுவந்தாற்போல் ... *
திரேகங்குளிர்ந்தாரோ- இருதோளும்பூரித்து ... *
தருக்கப்புகழுடைய- தருமர்தனஞ்சயற்கு ... *
எழுதினார்பாண்டியர்கள்-இன்பமாயோலைதன்னை ... *
காண்டாவனமெரித்த- காளையந்தஅருச்சுனற்கும் ... *
அரசாளும்நாயகியாள்- அல்லிமலர்நாயகிக்கும் ... *
சித்திரைமாதத்திலே- சீர்பத்தாந்தேதியிலே ... *
சுக்கிரவாரமது - தசமி புனர்பூசம் ... ... *
அம்மறைபவேளையிலே-அருச்சுனற்கும்அல்லியற்கும் ... *
கலியாணங்கலியாணம்-காரிகைக்குக்கலியாணம் ... *
கலியாணமென்றுசொல்லி-கனமானவோலையப்போ ... *

இட்டோருமூர்த்தமென்று- எழுதினேரோலையிலே ... *
ஓலைகண்டநாழிகைக்கு-உத்தமரோவாருமென்றார் ... *

[கலியாணம்.]

என்றிருக்குமோலைதன்னை- இராஜாக்கள்தான்பார்த்து ... *
ஐவர்பஞ்சபாண்டவர்கள்-அனைவோருந்தான்பார்த்தார் ... *
தருக்கப்புகழுடைய- தருமரவரேதுசொல்வார் ... *
இதுநல்லகாரியங்கள்- என்றுமனதிலெண்ணி ... *
சரியொத்தசம்பந்தம்- ஆமென்றார்வேந்தன் ... *
மதுராபுரிதனக்கு- மன்னவர்கள்பயணமானார் ... *
துரௌபதைநாககன்னி சுபத்திரையும்பயணமானார் ... *
மந்தாரக்குந்தியம்மாள்- மாதாவும்பயணமானாள் ... *
வந்துஇறங்கினார்- மதுரைப்பதிதனிலே ... *
அரசர்திருவுளத்தால்- அருச்சுனற்கும்அல்லியற்கும் ... *
செய்யுஞ்சடங்குவகை- செய்தார்கள்வேதியர்கள் ... *
மங்கிலியந்தானெடுத்து- வாழ்விசையன்தான்தரித்தான் ... *
மாதுகழுத்திலே-மங்கிலியஞ்சாற்றினபின் ... *
கூடியிருந்தார்கள்குங்குமக்கட்டிலின்மேல் ... *
அருச்சுனருமல்லியரும்-அமர்ந்திருந்தாரந்நேரம் ... *

[புலந்திரனுற்பத்தி.]

அப்படியாகவேதான் - அநேகநாட்சென்றபின்பு ... *
பாலகனுண்டானான்- பைங்கொடியாளல்லியரும் ... *
பத்துமாசமுஞ்சென்று- பாலகனைப்பெற்றெடுத்தாள் ... *
பெற்றாள்புலந்திரனைப் - பேருமிட்டாளல்லியம்மாள் ... *
வளர்த்தாள்புலந்திரனை- வைத்திருந்தாளல்லியரும் ... *

[புலந்திரனுக்குக் கலியாணம்.]

ஐந்துபிராயமது- அடைவாய்வளர்ந்தபின்பு ... *
தேசத்தழகு மன்னன்-திரிபோதிரன்தங்கை ... *
ஊன்றுங்கருங்குழலாள்- துற்சனையாள்தன்மகளை ... *
காரிழையாள்மாது அந்த-கலந்தாரிநாயகத்தை ... *
போரஞ்சாமன்னன்- புலந்திரவீரியற்கு ... *
கலியாணம்பண்ணவே- காரிழையாள் அல்லியரும் ... *
சரியொத்தசம்பந்தம்- தார்குழலாள்வேண்டுமென்று ... *
வேண்டுமென்றுசொல்லி- விரும்பியேமங்கையரும் ... *
ஐவருந்நூற்றுவரும்- அப்பவேகூடியொன்றாய் ... *

கூட்டிமணஞ்செய்தார்கள்- குமாரன்புலந்திரற்கு ...
கலியாணஞ்செய்தமே- கடிதிமுடிந்தபின்பு ...
அப்படியாகவே- அந்நகநாட்செல்றபின்பு ...
சேசத்தழகுமன்னன்- திரியோதிரப்பெருமான் ...
பருவமதயானை- பஞ்சவர்கள்ஐவரவும் ...
உருவமதயானை- உத்தபர்கள் ஐவரையும் ...
வலியபீவதானமைத்து- மாயத்தால்சூதாடி ...
பாரவனவாசம்- பஞ்சவர்கள்போனபின்பு ...
அன்றுமுதலாக- அருச்சுனனார்புத்திரனும் ...
காரிழையாள்டமாது- கலந்தாரிநாயகியும் ...
அவரவர்கள்தாய்வீட்டில்- அருமையாய்வளர்ந்துவந்தார் ...
தங்கள்தங்கள்தாய்மனையில்-சுகருடனேவளருகிறார் ...

[அல்லி - கொலுசபை.]

அப்போது அல்லியவள்-அரசாளும்நாயகியாள் ...
அஞ்சாப்பெரும்புலியாய்- அரிவையிளமங்கையரும் ...
ஆசாரமண்டபத்தில்- அருங்கிளியும்வீற்றிருந்தாள் ...
எண்டிசைக்குஞ்செங்கோல்- எதிரொருவரில்லாமல் ...
தப்பாதரசாண்டாள்- தாமரைசூழ்நாயகியாள் ... ...
மூத்துவளநாடு- முடிகவியும்பெண்பெருமாள் ...
பட்டமுஞ்செங்கோலும்-பாராளும்பெண்பெருமாள் ...
பிறவாமுடிதரித்த- பெண்பெருமாளல்லியரும் ...
கொம்பேரிடையாள்- கொலுக்கலைந்தபிற்பாடு ...
வண்டார்குழலாளும் மாளிகையிற்போய்ப்புகுந்து ...
சிங்காதனத்திலே - தேன்மொழியும்வீற்றிருந்தாள் ...
தனக்குக்கவரிபிடும் - தாதிமுகம்நோக்கி... ... ...
வயிரக்கவரியிடும்-மங்கையரைத்தானழைத்து ... ...
முத்திரக்கவரியிடும் - மூப்பிமுகம்நோக்கி ..... ...
செம்பொன்கவரியிடும்- தேன்மொழியேநீகேளாய் ... ...

[அல்லி - சொற்பனங்கண்டது.]

நேற்றையராத்திரியில்- நித்திரைபோம்போது ... ...
சொற்பனங்கண்டேன்நான்- மின்னுங்கருங்குழலே ...
தாமக்கருங்குழலாள்- தாதியருக்கூறலுற்றாள் ... ...
ஏதேது சொற்பனங்கள்- எனக்கியக்கூறுமென்றாள் ...

பிறவாமுடிதரித்த- பெண்பெருமாள்கூறுவாள் ... ...*
சோலைமலருடைய- சொக்கனார்கோவிலுக்கு ... *
சேவிக்கப்போனதாய்- தேன்மொழியேநான்கண்டேன் ...*
சோலைமலருடைய- சொக்கரவர்பார்த்து ... *
சிவனாருமப்போது- செங்கழுநீர்பூவெடுத்து ... ... *
செங்கழுநீர்பூவெடுத்து- தேவிகையிலதான்கொடுத்தார் ... *
அங்கயற்கண்ணம்மை- அகிலாண்டநாயகியும் ... ... *
கொண்டுவந்தானன்கையில்- கொம்பனையந்தான்கொடுத்தாள் ... *
மைந்தர்புலந்திரற்கு- வாங்கினேன்ஏர்க்குமென்று ... *
ஏர்க்குமென்றுவாங்கி- இந்திரனார்கைக்கொடுத்தேன் ... *
அதனையவர்வாங்கி- அவன்தேவிகைக்கொடுத்தான் .. ... *
மங்கைபருஞ்செல்வம்பெற்று- வளர்ந்திருக்கக்கண்டேனே ...*
நன்மையோ துன்மையோ- நாயகமேகூறுமென்றாள் ... *
தாமக்கருங்குழலாள்- தாதியருங்கூறலுற்றாள் ... ...*
ஆச்சிநீகண்டகனா - அறியவேசொல்லுகிறேன் ... ... *
(உன்) மைந்தனுக்குமைந்தன்-வாய்க்குங்காணதப்பாது ... *
புத்திரற்குப்புத்திரர்-பிறக்கும்புனக்கிளியே ... ...*
பிறவாமுடிதரித்த-பெண்பெருமாள்கூறுவாள் ... *
ஆரடிதாதியரே-அன்னப்பசுங்கிளியே ... ... *
பஞ்சவர்கள்நாடுவிட்டுப்-பாரவனம்போயிருக்க ... ...*
ஐவருங்காட்டகத்தே-அனல்பிறந்தாள்காட்டகத்தே... ... *
மாலைமுடியார்கள்-வனவாசம்போயிருக்க... ... ... *
வண்டார்குழலாளும்-மயிர்விரித்துப்போயிருக்க ... *
எந்தவனத்திலே இருக்கிறார்என்றறியேன் ... ... *
எக்காட்டுக்குள்ளே-இருக்கிறாரோநானறியேன் ... ...*
பஞ்சவரும்நாடுபெற்று-நாமும்பயந்தெளிந்து ... *
கொற்றவர்கள்நாடுபெற்று-நாமுங்குறைநீங்கி .. ... *
மன்னவர்கள்நாடுபெற்று-வருங்காலமெக்காலம் ... ... *
வண்டார்குழலாளும்-வாழ்பெறுவதெக்காலம் .. ... *
(என்) மைந்தருக்குமைந்தருமாய்-வாய்ப்பதுவுமெக்காலம் ...*
எண்ணாதுமெண்ணியே ஏங்கிமுகம்வாடினாள் .. ... *
தாமக்கருங்குழலாள்-தாதியருங்கூறுவாள் ... ... *
(நீர்) கண்டகினாநன்மைகாண்-கன்னியரேநீர்கேளீர் ... *
மைந்தருக்குமைந்தராய்-வாய்க்கும்புனக்கிளியே ... ...*

[புலந்திரன் பள்ளியறைக்கு அல்லிவந்துகாண்கிறது.]

பிறவாநாடிசரித்த-பெண்பெருமாள் கூறுவாள் ... ...*
போரஞ்சாமன்னன்-புலந்திரவீரியனார் ... ... *
(என்) பாண்டிப்பெருமாளின்-பள்ளியறையெங்கேயென்றார் *
மண்டபத்துக்குள்ளாக-மன்னவனார்பள்ளியென்றார் ... *
எங்கேயென்றுசொல்லி-எழுந்திருந்தாளல்லியம்மாள் ... *
சிங்காதனத்தைத்-திகழக்குதித்திறங்கி ... ... *
தாமரைக்கருங்குழலாள்-தாதிமுகம்நோக்கி ... ... *
கட்டழகி பெண்மணி-கன்னியரோவாருமென்று ... *
மெத்தனவேதானடந்து-மேல்பொருந்துங்கன்னனரும் ... *
சித்திரஞ்செய்மண்டபத்தே-சென்றாள்திருவிளையும் ... *
தான்பூட்டிக்கொண்டு-தனஞ்சயனும்பள்ளிகொண்டான் ... *
தாமக்கருங்குழலாள்-தாதியருமப்போது ... ... *
பேர்சொல்லித்தானழைத்தாள்-பெருமான்புலந்திரனை ... *
அஞ்சவார்மாதே-ஆரணங்கேநீபோமென்று ... *
வானாலேனத்தி-வளநாடிகான்திறந்தாள் ... ... *
எத்தித்திறந்தாளே-இந்திரனார்பொற்கதவை... ... ...*
தருமமுடியானும்-தனித்துப்படுத்திருந்தான் ... *
தேவியுடனேயிவர்-இருந்தடைக்காய்தின்னாமல் ... *
தேவியுடனேயிவர்-இருந்தமுடன்கூடாமல் ... ... *
தனியாகப்படுத்திருக்கச்-சங்கரனார்கட்டளையோ ... *
பகையான்தலைக்கடையில்-பத்தானவாசலிலே ... ... *
சகுனிதலைக்கடையில்-சண்டாளன்வாசலிலே ... ... *
மாதைதுயிலுரிந்த-மாபாவிவாசலிலே ... ... *
கோதைதுயிலுரிந்த-கொடும்பாவிவாசலிலே ... ... *
மாற்றான்தன்வாசலிலே-மாலையிடப்பெற்றேனே ... *
மற்றொருவர்வாசலிலே மாலையிட்டேனாகில் ... *
பொற்கைவளநாடியரைப்-போகவரப்பாரோரே ... *
வண்டார்குழலாளை-வரப்போகப்பாரோரே ... ... *
கொம்பனையாள்செய்கிறதோர்-குடிவாழ்க்கைப்பாரோரே ... *
இந்திரனார்தேவிசெய்யும்-இல்வாழ்க்கைப்பாரோரே... ...*
காணுதிருந்தேனே-கண்ணற்றாளானேனே ... ... *

பாராதிருந்தேனே-பாவிநானுமேனே ... ... *
மைந்தர்புலந்திரனைப்-பார்த்தாள்பலகாலும் ... ... *
கால்கள்தொடங்கிமேய-கரியகுழல்வாயும் ... ... *
பார்த்தாள்பலகாலும்-பார்த்தன்திருமகனை ... ... *
தாமக்குழலாளுந்-தாதிமுகம்நோக்கி ... ... *
(இவர்) பொய்யாமொழியும்-பொறுமைத்தலையழகும் ... *
ஊர்கள்தன்னழகும்-ஆசாரப்பேரழகும் ... ... *
தக்கநெறியுந்-தவத்திற்பெருமைகளும் ... ... *
தருக்கப்புகழனைய-தருமனைப்போலிருக்கும் ... ... *
இந்திரனார்மார்பும்-இடம்பெரியதிண்டோளும் ... *
வெற்றிமதயானை-வீமனைப்போலிருக்கும் ... ... *
அழகும்இளமையும்-அருச்சுனனைப்போலிருக்கும் ... ... *
தலையுந்தலைக்கட்டும்-சகாதேவன்போலிருக்கும் ... ... *
நடையும்நடையழகும்-நகுலனைப்போலிருக்கும் ... ... *
விரலும்விரற்கொடியும் வேந்தனைப்போலிருக்கும் ... ... *
காசிவளநாடனும்-கருணனைப்போலிருக்கும் ... ... *
ஐவர்திருவழகும்-அருமைமகன்தானுகொண்டு ... ... *
வேறேவருமோ-வேல்பொருந்துங்கண்ணுளே... ... *
மைந்தர்புலந்திரனை-வாளாலேதட்டிவிட்டாள் ... ... *

(புலந்திரன் தாயாரைக்காண்கிறது.)

சற்றேதான்தட்டலுமே-தருமர்திருமகனும் ... ... *
பொட்டெனவேகண்விழித்து புலந்திரனார்தான்பார்த்தார் ... *
(அவர்) அஞ்சிப்பயந்து-அனையன்எழுந்திருந்து ... ... *
உத்தமனார்வேந்தன்-உருமாலைதான்கழல ... ... ... *
திட்டெனவேதான்குதித்தான்-செம்பொன்னின்மெத்தைவிட்டு ... *
பூங்காவிற்போகவென்றால்-பொற்கொடியுங்கிட்டிவந்தாள் ... *
மலர்க்காவிலபோகவென்றால்-மாதாவுங்கிட்டிவந்தாள் ... *
மாலைமுடியானும்-மலரணையிற்பூவெடுத்து ... ... *
மாதாவின்பாதமதில்-மலர்தூவித்தெண்டனிட்டான் ... ... *
வந்துபணிந்தவனை-வாளாலேதானெடுத்து ... ... ... *
மாணிக்கமெத்தைதன்னை-வாளாலேதான்விலக்கி ... ... *
ஏறியிருந்தாளே- ஏகாந்தக்கட்டிலின்மேல் ... ... *
போரஞ்சாமன்னன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... *
இந்நேரம்ஆச்சிநீர்-இங்குவந்தகாரியமேன் ... *

(நான்) செய்துவந்த காரியத்தில்-செய்பிழையுமுண்டோ ... ... *
கட்டிப்புதுமையுண்டோ-உள்ளேறிக்குற்றமுண்டோ ... *
நாட்டிற்புதுமையுமுண்டோ-நாமேறிக்குற்றமுண்டோ ... ... *
யானைப்படு குழியும்-ஆச்சியிராச்சியத்தில் ... ... *
மெத்தகளவுகள்-மேல்விபரீதந்துண்டோ ... ... *
கப்பலுக்குஞ்சோங்குக்கும்-கேடுகள்போனதுண்டோ .. ... *
இந்நேரம்ஆச்சிநீ-இங்குவரக்காரியமேன் ... ... ...*
சொல்லியேதான்சொன்னான்-சுந்தரப்பூமுடியான் ... *
தாமக்கருங்குழலாள்-தாதியரும்மூப்பிமாரும் ... ... *
வேறொன்றுமில்லையையா-வேந்தர்பெருமானே ... ... *
அஞ்சாமத்தையென்று சொல்லி-அணைத்தெடுத்துத்தாதியர்கள் ...*
ஆடையொதுக்கியே-ஆபரணமொப்புமிட்டு ... ... *
உத்தமனூர்கோந்தருக்கு-உருமாலைதானேகட்டி ... ... *
காவலனூர்வீரியனும்-கைகட்டிநின்றானே ... ... ...*
அஞ்சியேநின்றானே-அரையர்பெருமானும் ... ... *

(புலந்திரனுக்குத் தாய்சொல்லுகிறது.)

மைந்தன் புலந்திரனை-வளநாடிகாண்பார்த்து ... ... *
திருமுடியானே-தனியாகப்பள்ளிகொண்டீர் ... ... *
(உன்) மச்சினிபாள்தானொழிய-மற்றொருத்தியாகாதோ... ...*
அத்தைமகளொழிய-அசல்நாட்டாளாகாதோ ... ... *
ஐயனார்கோவிலிலே-ஆம்பிரம்மையாளாகாதோ... ... ... *
நாடகசாலையிலும்-நாயகிமார்சங்களிலும் ... ... ...*
வேறொருத்தியாகாதோ-விசையன்மகனே ... ... *
கொம்பரிடையானே-கோவிலிலேதேவடியார் ... *
எண்பத்தெண்ணாயிரம்பேர்-இளங்கொடிமார்தானுமுண்டு ...*
அன்னநடைமாதர்களுள்-ளாகாதோமன்னவனே ... ... *
திருமுடியானே-சலிப்புவந்தகாரியமேன் ... ... ...*
மதுரைஐம்பத்தறுகாதம்-ஆளஅரசிருக்க ... ... *
ஆறாயிரவென்னும்-அணிதிரளாம்பாண்டியர்கள் ... ...*
பொன்னின்மலைநாடாளும்-போர்மேழிஅம்மானும்... ... *
மாலைமுடியாரோ-மாமன்மார்தானிருக்க ... ... *
நானுமிருக்கையிலே-நாயகரோஉந்தனுக்கு ... ... ...*
திருமுடியானே-சலிப்புவந்தகாரியமேன்... ... ... *

நன்றாகமைந்தனே-நான்பெற்றேனென்றிருந்தேன் ... ... *
பொன்றாகவும்மையும்-பெற்றதுவுநானடியேன் ... ... *
(புலந்திரன்சொல்லல்.)
போரஞ்சாமன்னன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... ... *
ஆடையெயாதுக்கி-அழகியவாய்ப்புதைத்து... ... ... *
வாய்ப்புதைத்துகைகட்டி-மன்னனெடுத்துரைப்பான் ... *
ஆச்சிநீர்கேளீர்-அடியேன்வாய்விண்ணப்பம்... ... ... *
தேசத்தழகுமன்னன்-திரியோதிரன்பாவி ... ... ... *
பருவமதயானை-பஞ்சவர்கள்ஐவரையும் ... ... ... *
உருவமதயானை-உத்தமர்கள்ஐவரையும்... ... ... *
விருந்தமிர்தமென்றுசொல்லி-வேந்தனைத்தானழைத்து ... *
வலுவிலேதானழைத்து-மாயத்தாற்சூதாடி .. ... ... *
மாயத்தாற்சூதாடி-மண்ணிழக்கமண்புதிது ... ... *
மாயத்தாற்சூதாடி-தருமாபுரந்தோற்று ... ... *
அத்தேசமுந்தோற்று-இருப்பிடமுந்தான்தோற்று ... *
வில்தோற்றுவாள்தோற்று-வீமாபுரந்தோற்று ... *
தருக்கட்புகழுடைய-தருமரவர்நால்வரையும் ... ... *
வீமர்அருச்சுனரை-வேந்தரவர்தோற்று ... ... *
நகுலசகாதேவ-ராசாக்களைத்தோற்று ... ... ... *
தம்மையுந்தோற்று-தம்பிமாரையுந்தோற்று ... *
ஆடைக்கொடிதோற்று-ஆபரணந்தான்தோற்று ... ... *
சேலைப்பணிகளுடன்-சேரஅவர்தோற்று ... ... *
ஆயிரங்கோடிவெள்ளை-யானைகளைத்தோற்று ... ... *
ஐந்நூறுகோடி-அசுவங்களைத்தோற்று ... ... *
ஆறாயிரங்கோடிரம்பை-அரிவையரைத்தோற்று ... ... *
நாடகசாலைப்பெண்கள்-நாயகியைத்தோற்று ... ... *
ஆனைகுதிரைகளை-அரசரவர்தோற்று ... ... *
சேரஅவர்தோற்று-செம்பொன்மணிமுடியார் ... *
நித்திலங்குப்பூமுடியார்-நீராழிமண்டபமும் ... ... *
பாவையுறங்கிப்-பளிங்குமாமண்டபமும் ... ... *
பெடைமலர்க்கண்ணுள்-பேரரசிமண்டபமும் ... *
காவலர்கள்தேவி கதைகேட்குமண்டபமும் ... ... *
தருமமுடிபஞ்சவர்கள் சனியென்னெனையமண்டபமும் ... *
பேர்பெரியபஞ்சவர்கள்-புதன்னென்னெனையமண்டபமும் ... *

தேனல்லோதாரர்கள்-சிவன்பூசைமண்டபமும் ... *
ஐவர்கள்பூசைசெய்யும்-அரனார்திருமேடை ... *
இத்தனையுந்தோற்று-இவ்வளவுமல்லாமல் ... ... *
வித்தகனார்பாஞ்சாலர்-பெற்றவிளக்கொளியை ... ... *
சொற்றவர்கள்பஞ்சவர்கள்-கொண்டகுலவிளக்கை ... *
தாமக்குழலாளை-தருமருடதேவியரை ... ... ... *
(என்) மானமதையும்வைத்து-மன்னவர்கள்தோற்றார்கள் ... *
இத்தனையுந்தோற்று-இருந்ததொருமன்னவரை ... *
தேசத்தழகனையும்-திரியோதனன்பாவி ... ... *
மாவுரியைத்தான்கொடுத்து-மன்னவர்கள்ஐவரையும் ... *
வெயிலிலேதானிருத்தி-வேந்தரையைவைத்தானே ... *
தோளுவடிவழகி-துரௌபதையாள்நாயகத்தை ... *
தாமக்குழலாளை-தன்னிரடக்கவைத்தான் ... ... *
வேல்பொருந்துங்கண்ணாளை-வீதிநடக்கவைத்தான் ... *
அன்னநடையாளை-அங்காடிகாட்டிவைத்தான் ... ... *
பாவையழகியாளை-பருந்காட்டமாட்டிவைத்தான் ... *
சொல்லாதுசொல்லியே-துயிலுரியவைத்தான் ... *
பஞ்சவர்கள்புண்ணியத்தால்-பாஞ்சாலன்புண்ணியத்தால் ... *
திருக்கப்புகழுடைய-தருமருடபுண்ணியத்தால் ... *
பேர்பத்துடைய-பெருமாளின்புண்ணியத்தால் ... ... *
மாளாதிருந்தது-மாறுதுயிலாடை ... ... *
உரியாதிருந்தது உத்தமியாள்பூவாடை ... ... *
அவிழ்காதிருந்தது-ஆணழகிபூவாடை ... ... *
உரிவிதழுவிதுயில்-உடைகுலைந்தாளாமாகில் ... ... *
வெற்றிமதயானை-வீமனதுதெண்டாலே ... ... *
வீமனதுதெண்டாலே-வேந்தர்படைகளெல்லாம் ... ... *
மாளுவதுஅன்றலவோ-மன்னன்பெரும்படைகள் ... *
சாகிறதுஅன்றலவோ-தனஞ்சயன்கைதெண்டாலே ... *
பஞ்சவரும்துரௌபதையும்-பாரவனம்போயிருக்க ... *
எந்தவனத்திலே-இருக்கிறாரென்றறியேன் ... ... *
எக்காட்டுக்குள்ளே-இருக்கிறாரோநானறியேன் ... ... *
பின்னையுடன்தம்பை-விருப்பமுடன்காய்கிழங்கு ... *
பண்ணையுடன்தம்பை-பறப்பையுடன்காய்கிழங்கு ... *
தின்றுஅவர்திரிய-தேசாந்திரிபோலே ... ... *

சாதிமலையிருக்க-கனிதுயிலுமுள்ளிருக்க ... ... *
காசிசேதும்தானும்-கதிபகாரிய ... ... *
எனக்குச்சுகமேது-என்சாமி சொல்லுமென்றான் ... *
பிறவாமுடிசரித்த-பெண்ணைப்பெருமாள்கூறுகிறான் ... ... *
அக்கமைக்குத்தீர்த்தவித்தீ-ரானந்தவாழ்மார்பா ... ... *
என்செய்வோம் என்மகனே-எழுந்துவசங்கப்பாறு ... ... *
துணையிலவிகிப்படிகள்-தப்பாதொருக்காலும் ... ... *
பாஞ்சாலிபட்டிரிய-பஞ்சவர்கள்காமைறைய ... ... *
உன்வலதுமெல்லவும்-உத்தமனேயல்லஇது ... *
தெய்வமல்லதுகண்டீர்-செம்பொன்முடியானே ... ... *
அடிநாள்அவதிகலண்டீர்-ஆனந்தமார்பருக்கு ... ... *

[புலந்திரனை- கலந்தாரிபிடத்தில்சேர்ந்துவாவென்றுசொல்வது.]

(உம்) மச்சினியாள்மீறி-வார்ந்துசமைந்தாளாம் ... *
அதனைமைமீறி-அவள் வளரக்கண்டேன் நான் ... ... *
கண்டேன்காவேலே-கட்டழகிநாவடிவை ... ... *
மச்சினியாள்கோவிலுக்கு-மன்னாநீர்செல்லுமென்றார் ... *
பொற்கொடியாள்கோவிலுக்குப்-போவீர்புலந்திரனே ... *

[புலந்திரன் மறுத்துச் சொல்வது.]

போராடுமாமன்னவன்-புலந்திரன்கூறுகிறான் ... ... *
பகைவன் அரண்மனைக்குப்-பாவிபிடாவாசலிலே ... *
சகுனிபெரும்பாவி-சத்துருவின்வாசலிலே ... ... *
(என்) காலைதுயிலுரிந்த-சண்டாளன்வாசலிலே ... ... *
கோதைதுயிலுரிந்த- கொடும்பாவிவாசலிலே ... *
மாதுபொருட்டால்-வலுவிலும்போவேனோ ... ... *
பஞ்சவரும்நாடுபெற்று-நாமும்பயந்தெளிந்து ... *
கொற்றவரும்நாடுபெற்று-நாமும்குறைநீங்கி ... *
மன்னவர்கள்நாடுபெற்று-வந்தபிறகாக ... *
வண்டார்குழலுடையாள்-வந்ததின்பிற்பாடு ... *
அன்னநடையாளும்- அவள்வந்தபிற்பாடு ... *
பொற்கொடியாள்வாசலுக்குப்-போவேன்காணச்சியமோ ... *
இப்போதும்போவதில்லை- என்தாயேயென்றுரைத்தான் ... *
அவ்வார்த்தைதான்கேட்டு- அல்லியவளேயுரைப்பாள் ... *
நேருக்குத்தம்பிதானே- துணைவேறுந்தம்பியரோ ... *
காலத்தாற்பெற்றபிள்ளை-வைகதுணைகண்டீரோ ... *

போனீரேயாமாகில்-புத்திரனைப்பெற்றிடுவீர் ... *
பெற்றீரேயாமாகில் பெருவாழ்வாய்வாழ்ந்திருப்பீர் ... *
பொற்கொடியாள் அரண்மனைக்குப்-போவீர்புலந்திரரே ... *
போரஞ்சாமன்னவன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... *
எனக்குமொருஐயாண்டு-ஏந்திழையாள்மூவாண்டு ... *
மாலையிட்டயித்பாடு-மாதுஅறியாமலே ... ... *
தையலற்குமங்கிலியம்-தரித்தவகைதானறியேன் ... *
என்னையவளும்-ஏந்திழையாள்தானறியாள் ... *
நானும்வளர்ந்தது-நாயகியும்தானறியாள் ... *
(என்) மாமியார்வீட்டை-மறுபடியும்போனதில்லை ... *
மாமியார்வீட்டிலே-மருவுண்டிவர்க்கதில்லை ... *
பொற்கொடியாள்வாசலுக்குப் - போகும்வகைசொல்லுமென்றான் *

[பிள்ளைமீதில் கோபித்து விலங்குபோடச்சொல்வது.]

அரசாளும்நாயகியாள்-அல்லியரும்தான்கேட்டு ... ... *
சீறிவெறிபறந்து-செவ்வாய்கருகவிட்டு ... *
ஊர்த்துளதிர்த்துபேசுவதும்-என்னுடன்சொல்லுவதும் *
மறுத்துத்தடுக்கிறாய்நீ-மன்னுசெறுவமென்ன ... ... *
இந்தச்செருவத்தை-இப்போதடக்குவென்பார் ... *
கட்டழகிதாதியரே- கருமானையழையுமென்றாள் ... *
விசையனார்சன்மகனை-விலங்கிலேபோடுமென்றாள் ... *
கால்விலங்கு கைவிலங்கு- கழட்டவொண்ணாப்பெருவிலங்கு *
மார்விலங்குதோள்விலங்கு-மன்னனுக்குப்போடுமென்றாள் *

[புலந்திரன்சொல்வது.]

போரஞ்சாமன்னவன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... ... *
என்னைவிலங்குபோட-என்செய்தேனென்தாயே ... *
போகாதஅரண்மனைக்குப்-பொற்கொடியேபோனேனோ ... *
மங்கையர்கள்கோவிலுக்கு-வலுவிலும்போனேனோ ... *
குடிமக்கள்வாசலிலே-கூசாமல்போனேனோ ... *
உப்பரிகையேறிபேரான்-உயரக்குதித்தேனோ ... *
கப்பல்கள்சேர்ந்துகள்-களவுகள்செய்தேனோ ... *
என்னகொடுமைசெய்தேன்-என்னைவிலங்கிட ... *
அரசாளும்நாயகியாள் - அல்லியருங்கூறுகிறாள் ... *
ஆமடாதம்பியரே- அல்லவென்றால்போகாது ... *
அத்தனையுமல்லாமல்-அரசேநீகேட்டருள்வீர் ... *

மச்சினியாள்பீதி-வளர்த்துசமைந்திருக்க ... *
மாதுசிறையிருக்க- மன்னவனேயாகாது ... *
குடியாள்சிறையிருக்க- கொற்றவனேயாகாது ... ... *
நாமிம்வராதுமன்று-நகரிகளுந்தேறாது ... ... *
ஊரம்வராதுகண்டீர்-உத்தமனேயுந்தனுக்கு ... *
மச்சினிபாள்கோவிலுக்கு-மகனேநீசெல்லுமென்றாள் .. *
போரஞ்சாமன்னன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... *
(உன்) ஆக்கினைக்குத்தான்பயந்து - ஆச்சியமோபோனாலும் *
(அவள்) கற்கோட்டைமுத்திரையும்-கன்னிடகாவல்களும் *
சந்திமதிலெழுப்பி-சூரியனைக்காணாமல் ... *
பக்கமதிலெழுப்பி-பகவானைக்காணாமல் ... ... *
வாசலுக்குஆயிரம்பேர்- வாள்வீரர்காவல்களாம் ... .. *
உருவினஆயுதங்கள்-உறையிலேபோடாமல் ... ... *
விழித்தகண்ணிமையிட்டாமல்-மெல்லியிடமிருப்பார் ... *
காதிவளநாடாளும்-கர்ணன்அதிகாரன் ... ... *
தாமக்குழலாளின்-தலைவாசல்காப்பானும் ... ... *
அத்தனையும்நான்கடந்து ஆச்சியமோபோனாலும் ... .. *
ஆறாயிரந்தாதி-அவளருகேயிருப்பாராம் ... ... *
அம்மாநீராடி ஆடுங்கழலாடி ... ... *
விளையாடிவீற்றிருப்பார்-மெல்லியராயிரம்பேர் ... *
பொற்கொடியாளரண்மனைக்குப்- போகும்வகை செப்புமென்றான். *
அரசாளும்நாயகியாள்-அல்லியருமேதுசொல்வாள் ... *
யாருமறியாதே-அம்மானைக்காணாதே ... ... *
அருகிருக்குந்தோழியர்கள்-யாருமறியாமல் ... *
மாதினிட வாசலிலே மன்னவனேநீர்போவீர் ... *
மேகப்புரவியது-வேந்தனேநான்தருவேன் ... *
என்றுரைமன்னா நீ-இனிபொல்லாதுஞ்சொல்லாதே ... *
மன்றாட்டுபேசாதே-மன்னர்பெருமானே ... *
குருமார்திருவாணை-தம்பிமார்தம்மாணை ... ... *
காதலறந்தபஞ்சவர்கள்-கட்டுபூசினன்றுரை ... ... *
பின்னைபொல்லாதுஞ்சொல்லாதே-பெருமான்புலந்திரனே *
மச்சினியாள்கோவிலுக்கு-மன்றுநீசெல்லுமென்றாள் ... *
போரஞ்சாமன்னன்-புலந்திரனும்ஏதுசொல்வான் ... ... *
(அவர்) எந்தலத்தில்-இருக்கிறார்என்றறியேன் ... ... *

எக்காட்டுக்குள்ளே-இருக்கிறாளென்றறியேன் ... ... *
இதுவுமொருகாரியமாய்-இவ்வாணைவந்ததென்ன ... *
மாளவென்றால்மாளுகிறேன்-மாதாவேயிப்போது ... *
ஆணைவிடும்தாயேயென்று-அடிவணங்கித்தெண்டனிட்டான் ...*
வந்துபணிந்தவனை-வாளாலேதானெடுத்து... ... ... *
ஆனைமுகர்பஞ்சவர்கள்-ஐவரிடஆணைவிட்டேன் ... ... *
காடுறைந்தபாஞ்சாலி-கட்டழகிஆணைவிட்டேன் ... ...*
தருமரிடஆணைவிட்டேன்-தம்பிமார்ஆணைவிட்டேன் ... *
மாதருடன்கூடி-மருவிவருமளவும் ... ... ... *
என்னாணைமட்டும்-இருக்கட்டும்இந்திரனே ... ... ...*
என்றுமவளுரைக்க-இன்பமுடன்தான்கேட்டு... ... ... *
மாதாவின்பாதமதை-மலர்தூவித்தெண்டனிட்டு ... ... *
கொம்பனைக்குத்தெண்டனிட்டுக்-கூறுவானிந்திரனும் ... *
உம்மாணைகொண்டுநான்-ஊர்வழியேபோவேனோ ... ...*
தாயாணைகொண்டுநான்-தனிவழியேபோவேனோ ... ... *
போனால்பலிக்குமோ-பொற்கொடியேயெந்தனுக்கு... ... *
ஆணைவிடுமென்று-அடிவணங்கித்தெண்டனிட்டான் ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியருந்தான்கேட்டு ... ...*
விட்டேனேஆணையெல்லாம்-வேந்தர்பெருமானே... ... *

(அல்லி இந்திரனைக்குறித்துப் புரவிவாங்குவது.)

ஆகாயவான்புரவி-அழைப்பித்துநான்தருவேன் ... ... *
இந்திரனேநீரும் இங்கேயிருமென்று... ... ... *
கட்டழகிநாயகியும்-காவலில்லைபோய்ப்புகுந்து ... ... *
ஆழச்சுனையில்- அரசியரும்தானிறங்கி ... ... .. *
காலோடுகண்ணும் கனிவாயுங்கொப்பளித்து ... ... *
வாம்பாம்பல்லும்-மதிமுகமுஞ்சுத்திபண்ணி ... .. *
தென்மதுரைநாட்டாளுந்-திருநீறுக்காப்புமிட்டு .. ... *
சிந்தித்துநின்றாள்-சிவனைஅடிபணிந்து... ... ...*
தேவேந்திரனை-நினைத்தங்கேதெண்டனிட்டாள் ... *
மைந்தர்புலந்திரற்கு-வான்புரவிவேணுமென்று ... *
மைந்தனுக்குசகாயமாய்-வரவழைக்கவேண்டுமென்று... ... *
ஆகாயவான்புரவி-ஆரணங்குவேண்டுமென்று ... *
இந்திரனைநோக்கி-எத்திசையுந்தெண்டனிட்டான்... ... *

மருமகள் காணினைக்க-மன்னவருந்தான்கேட்டு ...
தேவேந்திரரும்தன்-தேவிமுகம்நோக்கி... ... ...
கண்டாயோபெண்ணரசே-கயல்கண்ணாள் நின்றவிதம் ...
(தன்) மைந்தருக்குமைந்தருமாய்-வாய்க்கவேவேண்டுமென்று ...
புத்திரற்குப்புத்திரராய்ப்-பிறக்கவேவேண்டுமென்று ...
தபசுகள்செய்யுகிறாள்-கையிலிளம்பிறையாள் ... ...
என்றுரைக்கஇந்திரனார்-இந்திராணிதான்கேட்டு ...
தேங்காய்க்குமூன்றுகண்-தேசத்திலென்பார்கள்... ...
உடமையில்பெண்ணுக்கு-ஒருகண்மேணயுள்ளதுவும் ...
தோளுக்குத்தோளு-துணைவேண்டும்இந்திரரே... ... ...
அதனாலேயல்லவோ-ஆரணங்குவருந்துகிறாள் ... ...
ஆகாயவான்புரவி-அனுப்பவேவேண்டுமென்றாள் ...

(தேவேந்திரன் புரவிகொடுத்தது.)

தேவேந்திரபகவான் சிரித்துமனமகிழ்ந்து ... ...
வாரணத்துமேகங்களை-வானவர்கோன்தானழைத்து ...
பார்த்தாரோஇந்திரரும்-பார்வைகள்கொள்ளாதே ...
இப்படிக்குப்போனாலே-இந்திரற்குஏற்காது ... ...
என்றுஇவர்நினைத்து-இன்பமுள்ளபேரனுக்கு ...
பூமியில்வாழுகிற-புரவியைப்போற்சோடித்து ... ...
அந்தபடிவைத்தலவோ-அழகாயலங்கரிப்பார்... ...
நாலுகாலண்டையமாம்-நடுக்கழுத்திற்கொலுசுகளாம் ...
செம்பொன் சிறுசதங்கை-சேர்ந்தபலகளையும் ... ...
அம்பொன்னின்கிண்கிணியும்-அழகாகப்பூட்டினாராம் ...
மாணிக்கந்தன்னாலும்-வைடூரியத்தாலும் ... ...
நெற்றிக்குச்சுட்டிகட்டி-நேர்விழிக்குமையெழுதி ... ...
மெத்தைமடித்திட்டு-மேலேஅணைகோலி ... ...
சித்திரஞ்சேர்பூம்பட்டும்-சீராய்மடித்துஇட்டு ... ...
குப்பியில்சாந்தும்-குழாயில்புனுகுகளும் ... ...
வாய்த்தஇலைச்சுருளும் வர்ன்னப்பழக்காயும் ... ...
தட்டுப்புனுகுகளும்-சவ்வாதுபரிமளங்கள்... ... ...
பூவாலலங்கரித்தார்-புலந்திரனார்புரவிதன்னை... ...
வகைவகையாய்ப்பூச்சரங்கள்-வைத்துப்புரவியிலே... ...
சோடித்துஅலங்கரித்து-சுந்தரர்க்குவேண்டுமென்று ...
தேவேந்திரபகவான்-சிரித்துஅலங்கரித்து... ... ...

ஏற்குமோஇப்புரவி-இந்திரற்கேற்குமென்று ... *
கட்டிப்புரவியைத்-தாமந்தவாழ்மார்பன் ... ... *
குதிரைக்குபதேசங்-கூறினார்காதிலேதான் ... ... *
ஆகாயம்போகாதே-அயலோகம்போகாதே... ... *
செம்பொன்மணிமுடியான்-தேவியுடகோவிலுக்கு ... *
ஒருசாமப்பொழுதிலே-உக்ரமனைக்கொண்டுசென்று ... *
இருசாமமங்கே-இருக்குமட்டுந்தானிருந்து ... ... *
வெடியவொருசாமத்தில்-விடியட்டுவந்தாவிநி .. ... *
அப்போதவான்புரவி-அவருடனேசொல்லுது ... *
அருளருளும்ஐயாவே-அப்படியேயாகுதென்று ... *
வந்ததுகாண் அப்புரவி-மதுரைவளநாட்டுக்கு ... .. *
செம்பொன்கடிவாளம்-தென்னருடிகைப்பிடித்து ... *
மலர்க்காவிகான்கடந்து-வையைவளநாடியரும் ... *
மைந்தரிருக்கிறதோர்-மண்டபஞ்சென்றேறினான் ... *

[புலந்திரனை அலங்கரிக்கிறது.]

மாலைமுடியாளே- மஞ்சணீராடுமென்றாள் ... *
மஞ்சணீர்சாலையிலே-மன்னவனும்போய்ப்புகுந்து .. *
ஆடைகளைந்துவைத்து- ஆபரணந்தான்கழட்டி ... *
கத்தியுடனே அங்கி- காவலனுந்தான்கழட்டி ... *
சேரவேதான்கழட்டி-செம்பொன்மணிமுடியான் ... *
கொற்றவர்கள்கோமானும்-குளித்துக்கரையேறி ... *
துப்பட்டிகொண்டு- துவட்டினார்சுந்தரிமார் ... *
ஈரம்உலரவே-இணைகவரிவீசினார்கள் ... *
ஆடையெடுத்துடுத்தி-ஆபரணந்தான்பூட்டி ... *
கச்சைவரிந்துகட்டி-கத்திமிகச்சொருகி ... *
தென்னன்முடிவேந்தன்-திருநீற்றுக்காப்பணிந்து ... *
சிந்தித்துநின்று-சிவனை அடிபணிந்து ... *
செங்கழுநீர்பூவெடுத்து சிவனுலாஸ்தோத்தரித்து ... *
கஸ்தூரிபொட்டுமிட்டுக்-கண்டபெண்கள்சோர்ந்திடவே *
மாணிக்கமண்டபத்தில்-மன்னவனுஞ்சென்றானே ... *
சிங்காதனத்திலே-திறள்வீரன் வீற்றிருந்தான் ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியருங்கூறுகிறாள் ... *
மைந்தர்புலந்திரனை-மயிலனையாள்தான்பார்த்து ... *
ஆனந்தவாழ்மார்பா-அடிசலுக்குவாருமென்றாள் ... *

சிங்காதனத்தைவிட்டுத்-திகழக்குதித்திறங்கி ...
அழகான அம்மண்டபத்தை-ஆணழகன் சென்றானே ...
அரசாளும்நாயகியாள்-அல்லியரும்கூறலுற்றாள் ...
இரும்இருமென்று-இணைகடகக்கைபமர்த்தி ...
பொற்றவிக்குமேலே-புலந்திரனும்வீற்றிருந்தான் ...
புலிமுகக்காலிவைத்தாள்-பொற்றளிகைதானும்வைத்தாள்
சிங்கமுகமுக்காலி-செம்பொன் தளிகைவைத்தாள் ...
கைக்குநீர்வார்த்தார்கள்-காவலனார்வீரியற்கு ...
நீர்சுழற்றிஊற்றி-திகாவலனைமுன்கையாலும் ...
போனகம்வாங்கிப் புரிகுழலாள் தான்படைத்தாள் ...
போனகத்தோம்ட-பொறிக்கறிதான்படைத்தாள் ...
பத்துவகைக்கறியும் பதினெட்டுப்பச்சடியும் ...
நேர்கடகக்கையால்-நீறொடுத்துதான்கொடுத்தாள் ...
அறிவுடைநாயகற்கு-ஆகாரந்தான்கொடுத்து ...
அந்தவடிசல்-அமுதுண்டபிற்பாடு ... ...
அத்தளிகைமாற்றி பொற்றளிகைமுன்னேவைத்து ...
போனகம்வாங்கிப் புரிகுழலாள் தான்படைத்து ...
காச்சியபாலும்-கட்டிமாங்கனிப்பழமும் ...
திருத்தியமுதும்-செலுத்தியநெய்பாலும் ...
கூட்டிப்படைத்தார்கள்-கொம்பனைமார்தாதியர்கள் ...
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு ...
கைக்கழுவநீர்வார்த்தார்-காரிகைமார்தாதியர்கள் ...
கைக்கழுவிகொண்டு-கனகமணிமண்டபத்தே ...
உத்தமியுமைந்தனுமாய்-ஒக்கஉலாகொடுத்து ...
சித்திரஞ்சேர்மண்டபத்தில்-தேன்மொழியாள்வீற்றிருந்தாள்
முடிபூவுஞ்சந்தனமும்-மெல்லியருந்தான்வாங்கி ...
அடைக்காயும்வெள்ளிலையும்-அன்பாகத்தான்வாங்கி ...
மைந்தருக்குத்தான்கொடுத்து-மாதுநல்லாள்அப்போது ...
தானும்இலையமிர்தம்-தையலரும்தின்றாளே ...
மாதாஇன்பமாற-வர்ணகவுரிவீசினர் ...
தாமக்கருங்குழலாள்-சாதிமுகம்நோக்கி ...
கொண்டுவந்துபூட்டுமென்றாள்-குமாரன்புலந்திரற்கு ...
மச்சினியாள்மெய்ச்ச-வகைவகையாய்ப்பூஷணங்கள் ...
ஆபரணப்பெட்டி-அலைகோதிதான்திறந்து ...

ஆனந்தமார்பனுக்கு-ஆபரணந்தானெடுத்து ... *
தெரிந்தபணிதிகளை-செம்பொன்தளிகைவைச்சு ... *
கொண்டுவந்துமுன்னேவைத்தாள்-கொப்பேரிடையாளும் *
தென்னர்பெருமாள் [illegible]லிதீண்டவல்லான் ... *
ஆனந்தமார்பனு [illegible] த்துநிற்க ... *
முத்திழுமாலை-[illegible] *
மேவிச்சநல்ல [illegible] ... *
கட்டழக [illegible]ப்பிட்டு ... *
தேனல்மேல் [illegible]பிட்டு ... *
கொட்டுப்பூ [illegible] காதில் ... *
அனந்தமுடிசூட [illegible]பூ-டினர் ... *
ஒருமுத்தேமுத்து-[illegible]லாம்பெற்றதுபோல் ... *
பாசிமுத்துப்-பரிமுத்துக்கழ்வடமும் ... *
சவுளிப்பதக்கமுஞ்-சன்னல்பின்னல்தாழ்வடமும் ... *
ஆரபதக்கமும்-அழுக்குசரப்பளியும் ... ... *
பார்த்தல்பணித்திறமும்-பருமுத்துத்தாழ்வடமும் ... *
முன்கைமுதாரிகளும்-முடுக்கடகமோதிரமும் ... *
சந்திரகடகங்கள்-தாயித்திசோதிபின்ன ... *
அல்சக்கடகமும்-அழகானமோதிரமும் ... ... *
முத்திரைமோதிரமும் முன்கையில்கடகமும் ... ... *
செம்பொன்பவித்திரமும்-சேர்ந்தகணையாழிகளும் ... *
பொன்னின்அருணுவும்-பூட்டினார்பொற்சலங்கை ... *
கச்சையிறுகவணைந்து-கந்துமிகச்சொருகி ... ... *
பாங்குகள்தான்சொருகி-பாலனிடத்தாளில் ... ... *
பூஞ்சிலம்புதண்டையும்-பொன்மெட்டிமிகவணிந்து ... *
ஆபரணமெல்லாம்-அடங்கலுந்தான்பூட்டி ... ... *
இழையாயிரம்பொன்பெற்ற-இந்திரவாணப்பச்சவடம் *
ஆனந்தமார்பனுக்கு-ஆடைவரிந்துகத்தி ... ... *
நிரஞ்சனமாகவே-நின்றதாருமேனியெல்லாம் ... *
இத்தப்படியாக-இயலாய்அலங்கரித்து ... ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியருங்கூறுவாள் ... ... *
மைந்தர்புலந்திரனைப்-பாத்துவளநாடி ... *
கண்ணிருகீழ்வாருமல்-காட்பிடுங்கள்சாதியென்றாள் ... *
சந்தனமுஞ்சாந்தும்-சவ்வாதுமிகவணிந்து ... *

ஆலாத்திகாட்டுமென்றாள்-ஆனந்தமார்பனுக்கு ...
மூத்தாலேலஆலாத்தி-முப்பதுநூறாயிரம்பேர் ... ...
கருப்பூரஆலாத்திக்-காட்டினாராயிரம்பேர் ... ...

[புலந்திரனுக்குத் தாயார் புத்திசொல்வது.]

ஆகாயவான்புரவி-அலைதாராநீரேறி ... ...
ஒருசாமப்பொழுதிலே-உத்தமரோநீர்போய் ... ...
மந்திரவாள்தாறேன்-மன்னர்பெருமானே ... ...
வாள்வைச்சால்கதவு-திறக்குங்காண்மன்னவனே ...
தானேதிறக்குங்காண்-தனஞ்சயனேபொற்கதவு ... ...
போனாற்போல்நீரும்-பொற்கொடியையெழுப்பாதே ...
ஆராய்ந்துபார்த்து-ஆணழகாமன்னவனே ...
கையாலேதட்டிக் காரிழையையெழுப்பாமல் ...
வாளாலேதட்டி-மங்கையனைநீயெழுப்பும் ... ...
சற்றேதான்தட்டனுமே-தையலெழுந்திருப்பாள் ... ...
(அவள்) வாழும்பெருமைகளும்-மாமன்மார்சேவகரும் ...
உத்தமர்கள்பஞ்சவண்ணா-ஓட்டிஅரசாளுவதும் ... ...
கட்டழகர்பஞ்சவனாக்-காடோட்டியாளுவதும் ... ...
கர்னனிடசல்லிகையும்-காவலர்பேர்வீரியமும் ...
எசாதும்வசி-எடுத்துரைப்பாளர்மாகில் ... ...
உத்தரங்கள்சொல்லாதே-ஒக்கநீர்பேசாதே ... ...
கொற்றவனேஉந்தனுக்கு-கோபங்கள்வாராமல் ...
அத்தனைக்கும்உட்கொடுத்து-அலைதாராநீர்கேட்டு ... ...
எத்தனைசொன்னாலும்-எனக்காகநீர்பொறுத்து ... ...
அன்னமேஇக்கோவில்-யார்கோவில்சொல்லுமென்றும் ...
ஆரணங்கேஉம்முடைய-ஆச்சிபேர்சொல்லுமென்றும் ...
மங்கையமோஉம்முடைய-மாமன்பேர்சொல்லுமென்றும் ...
அன்னமேஉன்னுடைய-ஐயன்பேர்சொல்லுமென்றும் ...
மங்கைநல்லாள்தன்பேரும்-மணவாளன்தன்பேரும் ...
ஆரமுலையாள்-அடையாளஞ்சொல்லுமென்று ... ...
நீரும்அடையாளம்-நேரிழைக்குதான்கொடுக்க ...
தாறேன்அடையாளந்-தையலற்குநீர்கொடுத்து ... ...

[அடையாளங்கொடுத்தது.]

அல்லிக்கொடியும்-அழுத்தியசீராவும் ... ...
சீராவுங்கச்சுந்-திருமுடியுந்தான்கொடுத்தாள் ... ...

(தன்) மாமியாரிட்டதொரு-பவுத்திரந்தான்கொடுத்தாள் ... *
வாங்கிமுடிந்துகொண்டார்-மன்னர்பெருமானும் ... *
மாதாஅடையாளம்-வைத்தான்மடிதனிலே ... ... *
அரசாளும்நாயகியாள்-அல்லியருங்கூறுகிறாள் ... *
அரும்பாவிவாசலிலே-அமிர்தம்பொசியாதே ... ... *
கஸ்தூரிபூசாதே-கபடனதுவாசலிலே ... ... *
தண்ணீர்குடியாதே-தையலதுவாசலிலே ... ... *
கொப்பளித்துநீராம்-குடியாதேவாருமென்றாள் ... *
இருக்கஒருசாமம் ஏந்திழையைநீர்கூடி ... *
ரவொருசாமத்தில்-வந்துவிடுமென்றாளே ... ... *
அருளருளுமன்தாயே-அப்படியேயாகுதென்றார் ... *
போகவிடைதாருமென்று-புலந்திரனும்தெண்டமிட்டான் ... *
வந்துபணிந்திட்டதொரு-மகனைவாழ்த்தலுற்றாள் ... *
நீரோஅரசாள்வீர்-நீடூழிக்காலமெல்லாம் ... ... *
பெண்ணைப்பெறுவீர்-எதிர்த்தார்முடிபெறுவீர் ... *
பிள்ளைபெறுவீர்-பெருமானைப்போல்வாழ்வீர் ... *
போர்கள்கெலித்திடுவீர்-போர்க்களங்கள்வென்றிடுவீர் ... *
வாழ்ந்திடுவீரென்று-மனங்குளிரவாழ்த்தினாள் ... *
தேனல்லோதாரனுக்கு-திருநீறுதான்கொடுத்தாள் ... *
வாய்த்தஇலைச்சுருளும்-வெள்ளைப்பழக்காயும் ... ... *
காவலன்தன்வீரியற்குக்-கைநிறையஅள்ளியிட்டாள் ... *

[புரவியின்மகிமைசொல்வது.]

ஆதீனம்விட்டிறங்கி-அன்னநடையாளும் ... ... *
மாதாவும்முன்னடக்க-மைந்தரும்பின்னடக்க ... *
இக்காவுதோட்டத்தில்-சென்றாள்திருவனையும் ... ... *
வான்புரவிதன்பிடித்து-வைகைவளநாட்டிவரும் ... *
செம்பொன்னால்கடிவாளந்-தென்னுடிக்கைப்பிடித்து ... *
மைந்தர்புலந்திரனை வளநாடிதான்பார்த்து ... *
பூமியிலேவாழுகிற புரவியைப்போலெண்ணாதே ... *
வையாளிபுரவியோடி வருவதெல்லாங்கண்டோமோ ... *
கடிவாளங்கைவிடாதே கட்டழகாகற்பகமே ... *
அங்குபடிகால்விடாதே ஆணழகாமன்னவனே ... ... *
மாலைமுடியானே வழிபிடித்துவாருமென்றாள் ... *
பூச்சிலியைக்கண்டபின்பு வராமல்இருக்காதே ... *

வேந்தர்பெருமானே வெடியவிங்கேவாருமென்றாள் ...
அருளருளும்என்னாச்சி அப்படியேயாகுமென்றார் ...

(புலந்திரன் புரவிமேல்நடப்பது.)

மறுபடியும் தெண்டனிட்டான் மாதாவின்சீர்பாதம் ...
புரவியைச்சுற்றிவந்து போதசலாம்வாங்கினானே ...
அங்குபடிகால்வைத்து ஆனந்தவாழ்மார்பன் ...
உத்தமர்கள்புத்திரனும் உதாரிச்சுயேறினானே ...
ஏறினதுகண்டாளே இந்திரனைக்காணமே ...
பிள்ளையிவள்காணாளே பெருமான்புலந்திரனை ...
ஆகாயமாகவே அப்புரவிதான்பறக்க ...
அந்தரமார்க்கத்தில் அப்புரவியெழும்பினதே ...

(அல்லி புலம்பல்.)

மைந்தனைப்போகவிட்டு வாடிமனம்தளர்ந்தாள் ...
மாட்டேனெயென்றேனே வலிபதாய்ப்போகவிட்டேன் ...
கள்ளன் அறிந்தானோ காவலர்கள்கண்டாரோ ...
நாலால்கந்திரளார் நூற்றொருவர்கண்டாரோ ...
மாலைமுடியானை வதைசெய்தாராமாகில் ...
மாறுபடியெழிய மண்ணிலிருப்பதில்லை ...
பஞ்சவருக்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொல்வேன்
வெற்றிமதயானை வீமனுக்கென்னசொல்வேன் ...
அங்கவருக்கென்னசொல்வேன் அருச்சுனருக்கென்னசொல்வேன்...
சோலைமலருடைய சொக்கரல்லோசெய்ததெல்லாம் ...
அவரிட்டகலக்கமல்லோ யாதொன்றும்நானறியேன் ...

(அல்லி சொக்கர்கோவிலுக்குவந்தது.)

தண்டிகைதானிருக்க தையலருந்தானிருக்க ...
தானும்வழிநடந்து தையலருமந்நேரம் ...
சோலைமலருடைய சொக்கனார்கோவில்வந்து ...
மூக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டாள் ...
மைந்தர்புலந்திரற்கு வாட்டங்களில்லாமல் ...
மன்னர்புலந்திரனார் வந்தாரேயாமாகில் ...
ஆலாத்திபெண்கள் அதிசயமாய்த்தான்தருவேன் ...
மாடைவராகனும் மாணிக்கரத்தினமும் ...
செம்பொன்னுமுத்துகளும் சுவாமியேநானளிப்பேன் ...
கண்டுவந்தபொன்னையெல்லாம் சங்கரரேதான்தருவேன் ...

கொண்டுவந்து நான்சொரிவேன் கோபுரவாசலிலே
மைத்தர்புலந்திரற்கு வல்வினையில்லையென்று
திருமுடியில்புஷ்பமது சேரவேதள்ளுமென்றாள்
இருகையையேந்திநின்றாள் ஏலங்குழலாளும்

(சொக்கர் மீனாட்சியைநோக்கிச்சொல்வது.)

சோலைமலருடைய சொக்கனார்தான்பார்த்து
அங்கயற்கண்ணாயகியை அரனாருந்தான்பார்த்து
கண்டாயோமாதேநீ கயற்கண்ணாள் நின்றநிலை
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொற்கொடிமாதருக்குப் புஷ்பங்கொடுப்பதில்லை
அங்கயற்கண்ணம்மாள் அவர்முகத்தைத்தான்பார்த்து
எல்லோர்க்குங்கண்கள் இரண்டென்பார்ராச்சியத்தில்
தேங்காய்க்குக்கண்மூன்று தேசத்திலுண்டென்பார்
ஓடமலர்க்கண்ணாட்கு ஒருகண்மணி உள்ளது
பிறந்துதனியாளாள் பின்னைதுணைவேணும்
அகலவருந்துகிறாள் ஆரணங்குஇந்நேரம்
பொற்கொடியாள்மாதருக்குப் புஷ்பமதுகொடுப்பீர்
சங்கரருமப்போது சற்றேநகைநகைத்து
தங்கைபரிதாபம் தையலோகண்டாயோ
வெட்டுவேன்குத்துவேன் விலக்கிடுவேனென்றுசொல்லி
ஆக்கினைகள்செய்து அவனையிவள்போகவிட்டு
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொற்கைவளநாடியற்குப் புஷ்பங்கொடுப்பதில்லை

(மீனாட்சி சொக்கருக்குச்சொல்வது.)

அங்கயற்கண்ணம்மை ஆதீனத்தைவிட்டிறங்கி
மகாதேவர்பாதமது வணங்கியேதெண்டனிட்டு
அங்கயற்கண்ணம்மை அருகில்வந்துஎன்னசொல்வாள்
ஆறுயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாளுவோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரில்அவதரித்தாள்
வீறுகச்செங்கோல் மெல்லிசெலுத்திநின்றான்
மன்னன்விசையன் மடஆர்ந்தமாதேவி
காளைவிசையனார் கட்டழகன்தேவியிவள்

சிறுவிரல்பாதம்ரெண்டும் சிலம்புக்கால்கொப்பனிக்க
செண்பகப்பூமேலடிகள் திருவிணைக்குத்தானாக
அத்தனைநேரமட்டாய் இளங்கொடியாள்செஞ்சிரிக்க
இப்படிக்கிநீரிருக்க-இதுதுமக்குதருமமல்ல
பொற்கொடிமாதருக்குப்-புத்திமதுகொடுத்தால்
சந்தோஷமாயிவோள்-தருமமுடியழகி
சங்கரருமப்போது-தயவாய்மனமிரங்கி
சிவனருமப்போது-திருமுடியைத்தானசைக்க
ஏலங்குழலாளும்-இருகையுந்தான்நிறைய
வாங்கிமடியில்வைத்தாள்-மதுரைவளநாடியரும்

[சொக்கரைப் பிள்ளைக்குத்துணைபோவது.]

சொக்கருங்கூடத்-துணைபோகவேணுமென்றாள்
சிவனாருமப்போது தேவிமுகம்நோக்கி
ஆரமுலையாளோ ஆளடிமையானோமே
(அது) சந்தேகமோவென்று-சங்கரியுந்தான்சிரித்தாள்
சொக்கருங்கூடத்-துணையாகத்தான்போனார்
சந்நிதியைவிட்டுத்- சுவாமியவர்போனார்
தீர்த்தம் திருநீறும்- திருமாலைச்சந்தனமும்
கொண்டெதிரேவந்தார்கள்-கொம்பேரிடையாட்கு
தீர்த்தந்தெளித்தார்கள் திருநீற்றுக்காப்பணிந்தார்

[அல்லிகொலுவுக்கு வந்தது.]

சந்நிதியைவிட்டு- தையலரும்தானடந்தாள்
படித்துறையுந்தான்கடந்து-பாண்டிவளநாட்டாளும்
கோபுரவாசல் கொம்பனையுந்தான்கடந்து
தென்னன்தெருவும்-தேரோடும்வீதிவிட்டு
மன்னர்தெருவுகளும் மாடோடும்வீதிவிட்டு
வாசற்படிகடந்து- மண்டபஞ்சென்றேறினாள்
காமக்கருங்குழலாள் தாதியெதிரேவந்து
காலுக்குநீர்கொண்டு காரிழைமாரோடிவந்தார்
கோவிலுக்குப்போய்வந்தேன்-கொம்பனையேதாதிகளே
இதுகளொன்றும்நான்கண்டேன்-ஏலங்குழலாளே
பாவையழகியரும் பள்ளியறைபோய்ப்புகுந்தாள்
சருவணையில்கைக்கொடுத்து-தையலரும்வீற்றிருந்தாள்
அன்றுமுறையுடையார்- ஆயிரம்பேர்ஓடிவந்து

நானடியாளென்றுசொல்லி நாயகிமார்வந்தார்கள்
அரசாளும்பூமுடியாள்-அல்லியரசு கூறுகிறாள்
அத்தனைப்பெண்களையும்-அனுப்பிவிடைகொடுத்து
மெல்லியர்களெல்லாம் விடைபெற்றுப்போனபின்பு
செம்பொன்கதவடைத்துச் சிக்கெனவே தாள்பூட்டி
மங்கையரும்பள்ளிகொண்டாள்-மாணிக்கமெத்தையிலே
வெடிந்துவருவாரோ-வேந்தனையுங்காண்பேனென்று
வெல்பொருந்துங்கண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டாள்

[புலந்திரன் புரவிமேற்போவது.]

அந்நேரமிந்திரனார் - ஆகாயமார்க்கத்திலே
ஆகாயமாய்ப்பறந்து-ஆணழகன் வான்புரவி
மதுராபுரிகடந்து- வையைவளநாடுவிட்டு
வனமாய்வனங்கடந்து மலைகுகைகள் தான்கடந்து
கூடல்வளநாடு-குல்வீரன்றான்கடந்து

[கருமாபுரங்காண்கிறது.]

தாமரைசூழ் அல்லிமகன்- கருமர்புரங்கிட்டினனே
அத்திப்புரத்தை- அடுத்தான் அலங்காரன்
எத்திசையுந்தோட்டம்-எதிர்மலர்க்காவுகளும்
நாற்றிசையுந்தோட்டம்-நல்மலர்க்காவுகளும்
கொண்டாடிப்பூக்குமந்த குங்குமவெண்டாழை
நெடிதிலங்கொங்குவளை- நீலவர்ணக்கஸ்தூரி
பூமரங்களத்தனையும்- பூத்துச்சொரிந்தன
மந்தாரைபுன்னைகளும் மருவோடிருவாட்சி
மல்லிகைமுல்லை வாய்த்ததொருசண்பகமும்
வாழுகின்றபுன்னைமரம்-மாதுளம்பூவாசனையும்
திருவழுங்குஞ்சோலையும்-தெய்வஉலகம்போல்
கண்டான்புலந்திரனும்-கண்கள் ரெண்டுங்கொள்ளாதே
இத்தனை நாட்டையும்-இளவரையன்தான்பார்த்து
இப்பெரியநாட்டைவிட்டு எங்கொளித்தார்ஐயன்மார்
நந்தவனங்காடுறைந்தார்-என்னுடைய ஐயன்மார்
மாயத்தால்சூதாடி-மண்ணிழந்தார்பாண்டவர்கள்
கட்டழகன்இந்திரனும்-கண்களால்முத்துதிர்த்தான்
பூமரங்களத்தனையும்-புலந்திரன்றான்பார்த்து
பஞ்சவர்கள்கோமானும் பார்த்தன்திருமகனார்

வந்தாரேயிப்பொழுது-மச்சினியாள்கோவிலுக்கு
என்னத்தைநாம்கொடுத்து-இந்திரனைக்காண்கிறது
பூவாலைபச்சைவடம்-புலந்திரற்குத்தான்கொடுத்து
கொண்டுவந்துபோர்த்தினார்-கொற்றவர்கள்புத்திரற்கு
பூமரத்தைப்பார்த்துப்-புலந்திரனுங்கூறுகிறான்
காவலர்கள்பஞ்சவர்கள்-காடுறைந்துபோயிருக்க
வண்டார்குழலாளும்-மயிர்விரித்துப்போயிருக்க
யார்முடிக்கப்பூத்தீர்கள்-அழகியபூமரமே
தாபதிதான்முடிக்க-சத்துருவுந்தான்முடிக்க
மாற்றான்முடிக்கவோ - வந்துமலர்சொரிந்தீர்
பூமரங்கள்கூறும்- புலந்திரனைத்தான்பார்த்து
ஐயாநீர்கேளீர்-அடியேன்வாய்விண்ணப்பம்
மாலைமுடிபாண்டவர்கள் - வனவாசம்போனஅன்றே
காவலர்கள்பாண்டவர்கள்-காடுறைந்தநாள்முதலாய்
தருக்கப்புகழுடைய-தருமர்வனம்போனஅன்றே
வண்டார்குழலாள்-மயிர்விரித்துப்போனஅன்றே
நல்லமழையுமில்லை-நாட்டில்விளைவுமில்லை
செந்நெல்விளைவுமில்லை-தேசஞ்செழிப்புமில்லை
பூக்கள்மலர்ந்து-பூமரங்கள்பூவாது
ஆவுங்கரவாது-அரும்பாவிபட்டணத்தில்
வெள்ளியுத்தெற்கடைந்து-வேந்தனும்போய்மறைந்து
கன்னிரும்பால்மறுத்து-கடலுந்திசைமாறி
பாழாயிருக்குதையா-பட்டணங்களத்தனையும்
வேந்தர்பெருமானே-மிலாறுகதாயிருந்தோம்
மாலைமுடியானே-வருகிறதுநாமறிந்து
இப்போதிலேதுளிர்த்து-இந்நேரம்பூப்பூத்தோம்
வருகிறநாளறிந்து-மலர்சொரிந்தோம்மன்னவரே
வருவதற்குமுன்பாக-மன்னவரேபோவோமோ
போரஞ்சாவீரன் புலந்திரனுங்கூறுகிறான்
ஓட்டினார்பன்னிரண்டு-உத்தமர்கள்பஞ்சவரை
மாலைமுடிபாண்டவர்கள்-வருநாளுந்தானுச்சு
ஆறுவார்பாண்டவர்கள்-மாறுவார்நூற்றொருவர்
நம்முடைதேதாடுகளும்-நமக்குதான்ராச்சியமும்
எனக்கும்அஞ்சாமே-இருமென்றார்மன்னவரும்

அப்போது பூமரங்கள்-அழகுபூமெத்தைகள் ... ... *
புஷ்பமெத்தைசோடித்து-புலந்திரற்குதான்கொடுக்க ... *

[தருமா புரத்தில் அதிசயங் காண்கிறது.]

அப்பால்திரும்பி-ஆணழகன்வருகையிலே ... ... *
அக்காவில்வீற்றிருக்கும்-அன்னமுந்தாராவும் ... *
மானுங்கலையுமே-மயிலுங்குயிலினமும் ... ... *
சித்தானைக்கன்றுகளும்-சிறுத்தபுலிக்குட்டிகளும் ... .. *
காட்டானைக்கன்றுகளும் கரடிபுலிசிங்கங்களும் ... ... *
பாடிப்பறந்துவரும்-பஞ்சவர்ணக்கிளிகளும் ... *
ஐந்துகலைசாகமது-ஐவர்திருமகற்கு ... ... *
மாணிக்கபின்னம்வ-மணிவிளக்காய்க்கொண்டுவந்து ... *
மூத்துமுடிமன்னன்-முன்னகையிலதுகாண் ... *
மகாமிருகமத்தனையும்-வந்தெதிரேகண்டு ... ... *
வந்துளதோர்கண்டதை மன்னவனுந்தான்பார்த்து ... *
போரஞ்சாவீரன்-புலந்திரனுங்கூறுகிறான் ... ... *
என்னமாயிருந்தீர்கள்-இத்தனைநாளிவ்விடத்தில் ... ... *
பாண்டவர்கள்போனபின்பு-பாலமிர்தம்போதாதோ ... *
தாயாரிவாசலிலே-சத்துருவின்வாசலிலே ... ... *
பகையாளிவாசலிலே-பாலமிர்தம்உண்டீர்களோ ... ... *
என்றுமிவருணாக்க-இயலானமிருகமெல்லாம் ... ... *
மகாமிருகங்கூறும்-மன்னன்முகம்நோக்கி ... ... *
மாலைமுடிபாண்டவர்கள்-வனவாசம்போனஅன்றே ... *
வண்டார்குழலாள்-மயிர்விரித்தநாள்முதலாய் ... ... *
மன்னவர்கள்ராஜாக்கள்-வனம்போனநாள்முதலாய் ... *
(நாங்கள்) ஒக்கக்குடியிருப்போம்-உத்தமரோயெல்லாரும் ... *
கொங்குமலையிலேயும்-குடகுமலைகாட்டிலேயும் ... *
அங்கங்கேசேர-அமர்ந்திருந்தோமெல்லோரும் ... ... *
மாலைமுடியாரோநீர்-வருகிறசெய்திகண்டு ... ... *
காணவிருப்பமுடன்-காவலரேவந்தோம்காண் ... ... *
போரஞ்சாவீரன்-புலந்திரனுங்கூறலுற்றான் ... ... *
(அவன்) ஒட்டியபன்னிரண்டில்-ஒன்பதுந்தானுஞ்ச ... *
மூன்றுவருஷமின்னம்-முடிமன்னர் ஆளுவதும் ... ... *
அப்பாலேவீமன்-அவர்கள்திருமுடியை ... ... *
தெண்டிக்கிறாகொடிப்பார்-திரியோதிரன்படையை ... ... *

நம்முடைநாரிகளும்-நமக்குத்தான்ராச்சியமுந்
அஞ்சாதிருக்கவென்று-அப்புரந்தானடந்தார்

[பாண்டவர்கள் அரண்மனை காண்கிறது.]

ஐவர்அரசாண்ட-அரண்மனை இட்டிருமேனே
கொற்றவர்கள்சங்கமாறு-கொலுக்கூடங்கிட்டிருமேனே
பாண்டவர்கள்வீற்றிருந்தும்-பாரமணிமண்டபத்தே
பொற்றாணும்நற்றாணும்-பேரிகைஉத்தரமும்
உத்தரமும்சித்திரமும்-ஒக்கநிழற்காட்ட
இட்டிருக்கும்ஆதீனமும் எறிமணிசிங்காதனமும்
போட்டிருக்குமந்த-பொன்னாலேஆதீனமும்
தருமராஜாஆதீனமும்-தம்பியார்ஆதீனமும்
வீமராஜாஆதீனமும்-விசையனார்ஆதீனமும்
நகுலராஜாஆதீனமும்-சகாதேவர்ஆதீனமும்
மன்னவர்கள்ஆதீனத்தில்-மாற்றானைக்கண்டாமே
தருமராஜாஆதீனத்தில்-சண்டாளன்ஆள்கிறானே
பாண்டவர்கள்தன்னுடனே-பகுந்துஅரசாளாமல்
பாதியரசுஅவர்-பங்கிட்டுஆளாமல்
ஏதனாலேகாடுறைந்தார் என்னுடையஐயன்மார்
தருமத்தையெண்ணியவர்-தரணியிழந்தார்கள்
புண்ணியத்தையெண்ணியவர்-பூமியிழந்தார்கள்
அரண்மனையைப்பார்த்து-அழகியகண்முத்துதிர்த்தார்

[துரௌபதை அரண்மனைகாண்கிறது.]

கோபுரவடிவழகி துரௌபதையான்வாசலிலே
தையலதுவாசலிலே தங்கப்பொன்னாற்சமைத்து
நாணற்கொடிமுறுக்கி நற்கொடிகள்முத்தழுத்தி
பானுந்தொடரும் பசும்பொன்னலையடித்து
மாணிக்கத்தாலும் வைடூரியத்தாலும்
ஆணிப்பொன்னாலே அழுத்தியசீர்வாசல்
ஆச்சிதலைவாசல்கண்டு ஆணழகன்வயமெறிந்து
மாளிகையுமிங்கிருக்க மண்டபமுமிங்கிருக்க
ஆண்டமனைகளும் அரண்மனையுமிங்கிருக்க
ஐந்நூறுதாதியர்கள் அரட்டகவுரியிட
எழுநூறுதாதியர்கள் இணைகவரிகால்வீச
முந்நூறுதாதியர்கள் முறைசெய்துவந்துநிற்க

நெறியிருக்குமந்த இட்டசிங்காதனமும் ... ... ... *
ஆச்சிமாரெல்லவரும் அடியாரை ஆளவல்லீர் ... *
பருகல் உறுத்தவே பருமணல்கள் தானுறுத்த ... ... *
காடுதனிலிருக்கக் கன்னி துயில்கொள்ளிருக்க ... ... *
கானலிலும் வயலிலும் கதறியவர் திரிய ... ... *
எக்காட்டுக்குள்ளே இருக்கிருள் எனத்தடார் ... ... *
ஆச்சிதலைவாசல்தன்னில் அழுமையகண்முத்துதிர்த்தார் ... *
இந்திரருமப்போது எங்கியமுமப்போது ... ... *
கொண்டுபறந்ததப்போ குலவீரன் தன்புரவி... ... *

[புலந்திரன் அத்திபுரங் காண்கிறது.]

ஆகாயமார்க்கத்திலே அப்புரவிதான் பறக்க ... ... *
அத்திபுரங்கண்டாரோ ஐவர்திருமகனார் ... ... *
அந்தவள் நாட்டை அடுத்தது அப்புரவி ... ... *
அம்பலமோ ரொன்றுமேலோ ஐந்நூறுகாதவழி ... ... *
இடம்பெரியவாசலது எழுநூறுகாதவழி ... ... *
தூணுக்குத் தூணங்கே நானூறுகாதவழி ... *
ஆயிரங்காதவழி அகலமுள்ள அம்பலத்தில் ... ... *
நானூற்றுக்காதமது நலம்பெரிய அம்பலத்தில் ... *
முந்நூற்றுக்காதமது முத்தணிந்த அம்பலத்தில் .. ... *
பொற்றூணும் நற்றூணும் பேரிகை உத்தரமும் ... *
குளிர்சந்தனத்தூணும் குங்குமநற்றூணும் ... ... *
தூணுக்குத் தூணு துணைமாலையாய்ச்சேர்த்து ... *
மெத்தை அலங்கரித்து மேற்கட்டுசான்கட்டி ... ... *
சத்தி அலங்கரித்துத் தோரணங்கள் தான்கட்டி ... ... *
கண்ணாடி சல்லிகட்டி காவலன்றன் அம்பலத்தின் ... *
சங்கிலிமுத்தமண்டபமும் தங்கமுத்துமாலைகளும் ... ... *
எங்கெங்குஞ்சோதிவிட எழில்முத்துமாலைகளும் ... *
வந்துநிழல்காட்டும் மாணிக்கமாலைகளும் ... ... *
வாடாததாமரையும் வந்துநிழல்காட்ட ... ... *
முத்தும்மரகதமும் முழுப்பன்னீர்ச்சீலைகளும் ... *
தங்கத்தாற்பொம்மைகளும் செங்கழுநீர்மாலைகளும் ... *
செம்பொன்னின்கிலைகளுமே செம்பவழத்தூண்களும் ... *
எங்கெங்குஞ்சோதிவிட இராசாவின் அம்பலத்தில் ... *
சித்திரஞ்சேர்மண்டபத்தில் செம்பவளமாலைகளும்... ... *

வந்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச ... ...
வாழைக்குழுக்களும் வர்ணபலாச்சோலைகளும் ...
சேரவேநாட்டிய திகழ்பெரியஅம்பலத்திலே ... ...
நின்றவிடந்தோறும் நிலைதோறுஞ்சப்பரமும் ... ...
பார்த்தவிடந்தோறும் பந்தங்கள்சேர்விளக்கும் ...
காடைவிளக்குகளும் கைவிளக்குந்தேர்விளக்கும் ...
ஏணிவிளக்குகளும் எண்ணூறுதேர்விளக்கும் ... ...
தருமமுடியார்க்குச் சப்பரநல்விளக்கும் ... ...
பந்தங்கள்சேர்வையும் பகல்வற்றிஇடிபாணம் ...
பூவாணமத்தாப்பும் பொரிபாணந்தான்முழங்க ...
எத்திசையுந்தான்முழங்க இட்டிருக்குமம்பலத்தில் ...
ஏறியிருக்குமந்த எழுமணிசிங்காதனமும் ... ...
வந்திருக்குமன்னர் மாசேனைதன்னுடனே ... ...
முந்நூறுங்கோடி முடிமன்னரங்கிருக்க ... ...
கட்டியிடுமன்னவர்கள் இளவராயரங்கிருக்க ... ...
பாங்குபிடிக்கிறதோர் படைமன்னரங்கிருக்க ...
கத்திபிடிக்குமன்னர் காவலர்கள்அங்கிருக்க ... ...
கோடிலட்சங்கோடி கொற்றவர்களங்கிருக்க ...
சட்டைகழட்டாத சாமந்தர்அங்கிருக்க ... ...
வேதப்பிராமணரும் வேதியருமங்கிருக்க ... ...
பாஞ்சாலமகாராஜன் படைகளுஞ்சேனைகளும் ...
காசிவளநாடாண்டார் கர்ன்னனதுசேனைகளும் ... ...
கரும்பசையத்தேன்சொரியும் சோழன்பரிகலமும் ... ...
கடல்மேலாதாரனவன் இடும்பன்பரிகலமும் ... ...
ஆரங்கவேதமோதும் அகஸ்தியர்தந்தருளும் ... ...
மதுரைப்பரிகலமும் வளநாடுசேனைகளும் ... ...
ஏழுலகராஜாக்கள் எங்கும்நிறைந்திருந்தார் ...
கங்கைமணவாளன் தருதலையணங்கிருந்தார் ... ...
தருமமுடியழகர் சகலருமங்கிருந்தார் ...
முந்நூறுநாரியர்கள் முத்தின்கவரியிட ... ...
ஐந்நூறுநாரியர்கள் அஷ்டகவரியிட ... ...
எழுநூறுநாரியர்கள் இணைகவரிதான்வீச ... ...
பஞ்சோலைப்பெண்கள் பரிந்துகவிபாட ... ...
ஒட்டோலைப்பெண்கள் உகந்துகவிபாட ... ...

போனவகைகளும் விருதுபல்முழங்க ... ... *
கவிகோபாரிகவிபாட கட்டியங்களார்வரிக்க ... ... *
டவாரிதிருப்பறம்பும் பூவாளிமாரிசொரிய ... .. *
இசைமெத்தகுரம்பை கின்னரிகள் வாசிக்க ... ... *
வீணைகள் கின்னரிகள் வேணபடிவாசிக்க ... ... *
கர்ணன் திருமருங்கில் கட்டியபூச்சரங்கள் ... ... *
திரிம்பாதிரன்மருங்கில் செம்முநிழலாட ... ... *
திரிம்பாதிரன்பக்கலில் சிறப்பான பூச்சரங்கள் ... *
சர்மாசன் திருமருங்கில் கவ்விசுழலமட ... ... *
அவர்சுழலில்மாலை இவர்சுழலில்சாடை ... ... *
இவர்சுழலிலமாலை அவர்சுழலிச்சாடை ... ... *
ஏறியிருந்தார்கள் இருவருஞ்சிங்காதனத்தில் ... ... *
கண்டாம்புலந்திரனுங் கண்கள் கொண்டிம்கொள்ளாதே ... *
பாண்டவர்கள் தன்னுடமை பறிந்து அரசாளாமல் ... *
பாழரசுஅவர் பங்கிட்டுஆளாமல் ... ... *
எங்கெல்லாம்நிறைந்தார் எனுடையஐயன்மார் ... *
இக்காடிராஜமன்னர் இருக்கஇடமிருக்க ... ... *
ஐவர்ந்தபாண்டவர்கள் அவர்க்குஇடமில்லையென்று ... *
அந்நேரம்காட்டே-அடித்தோட்டிவிட்டானே ... .. *
நிற்குமோ இவர்வாழ்வு நிலைக்குமோ இவ்வரசு ... ... *
இப்பெரியஅம்பலத்தில் இருந்தராசர்கங்கள்முன்னே ... *
கட்டழகியென்தாயார் கால்நடையாய்வந்தாளோ ... .. *
பார்த்துமிருந்தாரோ பாண்டவர்கள் ஐவருந்தான் ... *
கண்டிருந்தாரோ காளையவர்ஐவருந்தான் ..... .. *
சுருக்கப்புகழுடைய தருமராஜாஆயுதமும் ... ... *
எழாயனைபல்முடைய இயல்வீமர்ஆயுதமும் ... ... *
வெற்றிமதயானை வீமராஜாதெண்டுகளும் ... ... *
போலப்புதுமைகளைப் புகழ்வீராகாதே ... ... மே
சேலையின் அரண்மனைக்குச் செம்மறவடிவுமில் ... லை
குக்குமகதம்பம் குலைந்துமிருக்கவில் ... ... லை

பொய்வந்தேனென்று பொய்யுரைத்தீர் மன்னவ ... ... னே
எங்கேயிருந்து வந்தீர் இளவயதுக் காமா ... ... னே
எத்தூரஞ்சென்று எவ்விடத்தில் பள்ளிகொண்டு ... ...ர்
என்று அவள் தாய் கேட்க எடுத்துரைப்பாரிந்திர னு ... ர்
பொய்வந்தேனென்றுச்சி பொய்கைதனில் நீரா ... டி
புஷ்பமலரெடுத்து போற்றிப்பணியவந்தே ... ... ன்
உள்ளத்தைத்தானுரைத்தான் உத்தமசிகாமணியு ... ம்
மலர்க்குழலாள் மாது மயிலனையாளோதுலாப்பா ... ... ள்
நீர்ப்பாணபுதுமைகளும் பொற்கொடியைக்கண்டதுவு ... ம்
ஆனந்தவாழ்மார்பன் அரசாளும் நன்மைகளு ... ம்
வாசற்புதுமைகளும் வைத்திருக்குங்காவல்களு ... ம்
எதிரொருவரில்லாமல் இராச்சியத்தை ஆள்கிறது ... ம்
உத்தமர்கள் பாண்டவரை ஒட்டியரசாள்கிறது ... ... ம்
கட்டழகிதம்முடனே கைகலந்தபாவனையு ... ... ம்
ஒன்றும் ஒளியாமல் உத்தமனே சொல்லுமென்று ... ... ள்
என்னுடைய தம்பி எனக்கறியச் சொல்லுமென்று ... ... ள்
ஆனால் ஒளியாமல் ஆச்சியரே சொல்லுகிறே ... ... ன்
ஆணைவிடுமென்று ஆச்சியைத் தெண்டனிட்டா ... ன்
ஆணைவிடுவதில்லை அருளாளா சொல்லுமென்று ... ... ள்
தென்னாடி ஆதீனத்தில் சிறுவனும் வீற்றிருந் ... து
மாதாவின் முன்னாக மன்னவனுமேது சொல்வா ... ன்
(உங்கள்) ஆறுயிரவரொன்னும் அணிதிரளாம்பாண்டியற்கு ... ம்
பொன்னிமையில் நாடாளும் போரொழுதி ஐயருக்கு ... ... ம்
வையமுழுதாளுகின்ற மாமிபார்த்தனுக்கு ... .. ம்
தெண்டனிட்டேனென் விண்ணப்பம் தெரிவிப்பீர் மன்னவ ... ரே
(என்று) தேனார் கருங்குழலாள் தெரிவித்தாள் யாவருக்கு ... ம்
(அந்த) மதுவிடை கொடிக்க வந்தேன் காணுசசிய... ... ரே
ஆகாயவான்புரவி அலைதாரா எங்கேயென்று ... ... ள்
பொன்னுமணியழகன் புலந்திரனுமேது சொல்வா ... ன்
பூங்காவனந்தனிலே புரவியைவிட்டேனென்று ... ன்
அரசாளும் நாயகியாள் அல்லியருந்தான் கேட் ... ... டு
மாதுகருங்குழலாள் மல்லிக்காவிற்போய்ப்புகுந் ... து
வான்புரவியைப்பிடித்து வையையவள் நாடியரு ... ம்
கடிவாளங்கைப்பிடித்துக் கட்டழகியல்லியம்மா ... ள்

தேவேந்திரனுடைத் தெரிசித்துப்பெண்மயிலு ... ... ம்
(நீர்) வரவிட்டகாரியங்கள் நிறைவேறித்தீர்ந்ததுகா ... ண்
புரவிவருகுதுகாண் புண்ணியமேயென்றுசொல் ... ... லி
கண்டுகொள்ளுமென்று சொல்லிக் கயற்கண்ணாள்தெண்டனிட்டா ள்
ஆகாயமாயெழும்பி பறந்ததுகாண் அப்புர ... ... வி
வணங்கியெழுந்திருந்து வண்டார்குழலாளு ... ம்
மைந்தனிருக்கிறதோர் மண்டபத்திற்போய்ப்புகுந் ... து
பொற்றளிகையுண்டு பொற்கொடியுமைந்தனுமா ... ய்
இளைப்பாறுமண்டபத்தில் இருந்தாரிருவருமா ... ... ய்
ஆணையெல்லாம்விட்டேன்காண் ஆனந்தவாழ்மார் ... பா
என்றுமிகக்குளிர்ந்து இருந்தார்கள்மருணாயி ... ... லே

(கலந்தாரியைத் தாதிமார்கண்டது.)

அப்படியாயிருக்க ஆனதொருநளையி ... ... லே
மற்றுநாளானபின்பு மாதார்கருங்குழலு ... ... ... ம்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிநாயகமு ... ... ம்
தாமக்கருங்குழலாள் தன்னுடையதாதிய ... ... ... ரை
பேர்சொல்லித்தானழைத்தாள் பேடைமலர்க்கண்ணாளு ... ம்
அசந்துநித்திரைபோய்விட்டாள் ஐவர்மருமகளு ... ... ம்
அத்தைமகன்மேல்நினைவாய் அசந்துநித்திரைபோகிறளா ... ம்
அந்நேரந்தாதியர்கள் அலண்டெழுந்திருந்தா ... ... ர்
தங்களுக்குள்ளாக தையலர்கள்விசாரமிட் ... டு
முந்தியெழுந்திருந்து முருகுழல்மாரோடிவந் ... து
நம்மையெல்லாந்தட்டி நாயகியாளெழுந்திருப்பா ... ள்
மாதுக்குநித்திரைகள் வந்தவாறெவ்வா ... ... று
என்றுமனந்தளர்ந்து ஏந்திழைமார்விசனமிட் ... டு
செம்பொன்கதவருகில் தேன்மொழிமார்வந்துநின் ... று
வாளேந்திழைதனிலே மயிலனைமார்யாவர்களு ... ம்
பாவையருகில்வந்து பள்ளியறைப்போய்ப்புகுந் ... து
எறிட்டுப்பார்த்தார்கள் இளங்கொடியாள்சீர்வடி ... வை
ஆடையவிழ்ந்ததும் அறியாளாம்பெண்கொடியு ... ம்
ஆபரணங்கலைந்ததுவும் ஆரணங்குதானறியா ... ள்
உற்றுத்துப்பார்த்தார்கள் ஒளிவுடையாள்சீர்வடி ... வை
சந்தனங்கள்பூசினது சரிந்துமிருந்ததுகா ... ... ண்
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வந்தவாறெவ்வா ... று

இருவர்பள்ளிகொண்டதுபோல் இருக்குதுகாண்மாதர்க ... ளே
மசங்கியிருக்குதுகாண் மாதிவிடபூச்சரங்க ... ள்
நிறைந்துமிருக்குதுகாண் எங்கெங்கும்பூச்சரங்க ... ள்
அடைக்காய்கள்தின்னாமல் அரைப்படிக்கமாயிருக்கு ... ம்
முழுப்படிக்கமாய்நிறைந்து முழுகலக்கும்வழிந்தோ ... ட
வண்டார்குழலாட்கு வாசனைகள்மிஞ்சுதுகா ... ண
இந்நாட்டுவாசனைகள் எந்நாளுமேயல்லவி ... து
இந்திரலோகத்திற்கு எட்டுதேவாசனைக ... ... ள்
மன்னர்திருமகளார் வந்தாரோவிசையுட ... னே
அரசாளும்நாயகியாள் அல்லிவரவிட்டா ... ... ளோ
ஆகாயந்தானிருந்து அந்தரமாய்க்குதித்தா... ... ரோ
சற்கோட்டைமுத்திரையும் கர்ணாதுகாவலி... ... லோ
எப்படிக்குவந்தாரோ என்றுவிசனமிட் ... ... டு
தங்களுக்குள்ளாகத் தையல்மார்விசனமிட் ... ... டு
தாமக்குழலாளைத் தட்டியெழுப்பவென்று ... ...ல்
இந்திரன்மேற்சிந்தையினால் எழுந்திருக்கப்போவதில் ... லை
இதுவுமேயில்லாமல் இயாதொன்றும்தானறியா ... ள்
தாதியர்களெல்லோரும் தையலைப்பார்த்திருந்தா ... ர்
குளிர்சாந்துசந்தனமும் குளிர்கவுரில்தான்தெளித் ... து
ஈரொட்டுவெண்கவுரி இசைந்தவெண்சாமரங்க - - ள்
காரிகைமார்தன்கரத்தில் கவுரிபரிமாறினார்க - - ள்
மெல்லிநல்லாள்மதிமுகத்தில் வெண்கவுரிவீசலு - மே
கவுரிகொண்டுவீசலுமே கனாதெளிந்துகண்விழித்தா - ள்
சுத்திநிறைந்திருக்கும் தோழியிளந்தாதிக - - ளை
அத்தனைபேரையும் அருமையவள்கண்காட் - - ட
மெல்லியர்களெல்லாரும் வெளியேமறைந்தார்க - - ள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதிதனித்திருந்தா - - ள்
தனித்திருந்ததாதியவள் தனியாகவந்துநின் - - று
மாதுதனையெடுத்து மடிமேலேதான்வளர்த் - - தி
ஆரங்கள்தான்திருத்தி அழகுபணிதான்பூட் - - டி
கோர்வைகள்தான்திருத்தி குழற்கோதிக்காம்பனைக் - கு
வாளிகள்தான்திருத்தி மயிர்க்கோதிமங்கையற் - - கு
மெத்தனவேசொப்பனமாய் மெல்லியைத்தான்பார்த் - து
கண்கள்சிவப்புடனே கன்னியவளேதுசொல்வா - - ள்

வர்ணப்பசுங்கிளியே வாடாதசெண்பக மே
வாடியிருப்பதென்ன மாதுதிருமுகங்க ள்
சீறியிருக்குதுகாண் செண்பகப்பூமேனியெல்லா ம்
அலர்ந்தசெந்தாமரைபோல் அரிவையரேயுன்முகங்க ள்
மலர்ந்திருக்குமிது நெடுநாள் வாடிருக்கக்காரியமே ன்
குங்குமம்பூசி குலைந்துமிருக்குதுகா ண்
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வந்தவாறெவ்வா று
பங்கிட்டுக்கொள்ளுமோவாம் பாங்கிமாரெல்லவரு ம்
மெத்தநலங்கியே மெல்லியரேயிருப்பதென் ன
அடைக்காய்கள்தின்னாமல் அலைப்படிக்கலாயிருக்கு ம்
மேலாய்வழிந்ததுகாண் மெல்லியரேதம்பலங்க ள்
வண்டார்கருங்குழல்மேல வாசனைகள்மிஞ்சுதுகா ண்
இந்நாட்டுவாசனைகள் இளங்கொடியேயல்லவி து
வானவர்லோகத்தில் வந்ததொருவாசனைக ள்
காரிகையேயுன்னைக் கலியாணம்பண்ணுகையி ல்
தாலியுடன்மாலையும் சந்தனமுங்குங்குமமு ம்
மந்தாரக்கூறையும் மைகளுடன்தான்சிவப்பு ம்
வரவிட்டார்கண்டீரோ வண்டார்குழலா ளோ
அந்தப்பரிமளங்கள் ஆரணங்கேவந்ததுகா ண்
மன்னர்திருமகளூர் வந்தாரோஉறவா க
அரசாளும்நாயகியாள் அல்லிவிவேகியல் லோ
பூசம்பணிசெய்யும் பொற்கொடியாள்வாசலி லே
மேகத்திலேற்றி மெல்லிவரவிட்டா ளோ
ஆருமறியாமல் அருச்சுனனார்புத்திரரு ம்
மாலைமுடியாளே மைத்துனரும்வந்தா ரோ
மைத்துனனாரவர்வந்த வரலாற்றைசொல்லுமென்றா ள்
கட்டார்கருங்குழலாள் கலந்தாரிதான்கேட் டு
கண்கள்சிவந்து காந்தாரம்தானா கி
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்ததுபோ ல்

(கலந்தாரி தாதிகளுக்குச் சொல்வது.)

தாழைக்கருங்குழலாள் தாதிமுகம்தான்பார்த் து
வஞ்சிநீதாதியரே இப்புகழைப்பேசவந்தா ய்
(மதுரை) அரசாளும்பூமுடியார் அவரங்கேயிருக்கையி லே
(என்) மைத்துனனாரிங்கே வரும்வாறுமெவ்வா று

கற்கோட்டைமுத்திரையும் சர்ப்பநாகாவல்களு - - ம்
இத்தனையுந்தான்கடந்து இவ்விடம்வருவதுண் - டோடீ
ஆறுயிரம்கோடி அருகில்இருந்தீர்க - - ள்
காரிழையார்தாதிகளே கண்கெட்டுப்போனீ - - ரோ
இச்சிறையில்பாங்கக்க எல்லோருஞ்சொல்லீ - ரோ
வன்சிறையில்காக்கவைத்தால் மாதரொல்லாருஞ்சொல்லீ - ரோ
தாதியர்க்குளளிதாக தையலரும்நானிருந்தே - - ன்
வேண்டேன்இனி ஜென்மம் வெறுத்தேன்காண்மங்கைய - ரோ
மாண்டாளுஞ்சேதமில்லை வண்டார்குழலிய - - ரோ
ஆரவிளமுலையாள் அறைந்துகொண்டுதானழுதா - ள்
தாமக்கருங்குழலும் தாதியருந்தோழியரு - - ம்
செங்கமலநாயகியுஞ் சேரவேயோடிவந் - - து
காசிவளர்கர்ணர் கட்டழகர்தான்கேட்டா - - ள்
ஆக்கினைகள்வந்துவிடும் அருவையிளமயி - - லே
அறியாமற்சொன்னோமே அரசேபொறுத்தருள்வீ - ர்
மாதின்திருவடிக்கே வந்துமிகதெண்டனிட்டா - - ள்
தாதியவள்தணிக்கத் தணிந்திருந்தாள்தையலரு - ம்
கொம்பேரிடையாளும் கோபந்தணிந்தபின் - - பு
போனகத்தாதியரும் பொற்கொடியைத்தேடிவந் - - து
போசனங்களாச்சுதென்று பொற்கொடியுந்தானழைத்தா - ள்
பூவணையைவிட்டிறங்கி புஷ்பமலரணையா - - ள்
வாசமுடன்மீந்து மலர்க்குழலாள்பூவுக - - - ந்து
பாவையருமப்பொழுது பற்கொம்புதானெடுத் - து
பல்லைவிளக்கிப் பவழவாய்கொப்பளித் - - து
ஸ்நானங்கள்செய்து சந்திசெபம்தான்முடித் - - து
மாணிக்கமண்டபத்தில் மங்கையருவீற்றிருந்தா - ள்
தாதியர்களெல்லாந் தையலற்குமுன்னேவந் - து
பொன்னின்துயிலொதுக்கிப் பின்புறமாய்வந்துநின் - று
மாணிக்கச்சீப்பாலே வாசிமயிர்க்கொண்டையிட் ... ... டு
பரிமளபுஷ்பங்கள் பைங்கிளியாள்பூங்குழலி ... ... ல்
மருக்கொழுந்துமாலைகள் வைத்துமுடித்தார்க ... ... ள்
புஷ்பமலராட்டைப் பூமுடித்தாளபின் ... ... பு
புலிமுகச்சிலைவைத்துப் பொற்றளிகைகாலும்வைத் ... து
மற்றுமுள்ளகாய்கறிகள் வர்ணத்தளிகையைத்தா ... ... ன்

பொரித்தபொரிக்கறியும் பொன்போற்சிறுபருப்பு ... ... க்
பத்துவகைக்கறியும் பதினெட்டுப்பச்சடியு ... ... ம்
அன்பானபச்சடியும் அடைவாய்ப்பரிமா ... ... றி
புத்துருக்குநெய்யும் புதுமையுடன்தான்வாரித் ... ... து
பொன்போன்றசெம்பிமேல வெந்நீருந்தான்வார்த் ... து
அந்தவடிசல் அமுதுண்டபின்பா ... ... டு
மூடிபூவுஞ்சந்தனமும் மிகவாரிவெள்ளிலையு ... ... ம்
அடைக்காயுந்தின்று ஆனந்தவாழ்மார் ... ... ழி
பூசித்துத்தானிருந்தாள் பருவிலைத்தினந்தோறு ... ... ம்

[கலந்தாரிக்குக்-கெர்ப்பமுண்டானது.]

பொன்னுமணியழகர் புலந்திரனார்மேனியுற் ... ... கு
மூலைவீரன்தேவியர்க்கு மூன்றுதிங்களாச்சு ... ... து
வண்டார்குழலாட்கு மைந்தனாய்த்தோன்றிற் ... ... று
இட்டபடுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளா ... ... து
உற்றுற்றுப்பார்த்து ஒருபோதுஉண்டிருப்பா ... ... ள்
தின்றாள் இலையடைக்காய் தேனூர்குழலாளு ... ... ம்
அம்மாநீராடாளாம் அருங்குழலைப்பந்தாடா ... ... ள்
பற்றும்பிடித்தறியாள் பள்ளாங்குழியாடா ... ... ள்
காரிழைமாதுக்குக் கழுத்துகள்நேர்ந்ததுகா ... ... ண
குழிசாதுகள்பேடலே குலைவயிறுபெருத்த ... ... து
திருவயிறுமேனியும் சீர்பெறவேதான்செழிக் ... ... க

[கலந்தாரிக்குக் கெர்ப்பமடைந்ததைத் தாதிமார் காண்கிறது.]

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்தான்பார்த் ... ... து
மாதுமுகம்நோக்கி மங்கையெடுத்துரைப்பா ... ... ள்
வண்டார்குழலியரே மைந்தராய்த்தோன்றுவதே ... ... ன்
மாலைக்குழலாளே மைந்தன்வந்தவாறே ... ... து
கழுத்தடிகள்நேர்ந்து கன்னிமுகமாறுபட் ... ... டு
இளைப்புந்தளர்ப்புமாக எந்திழையேதோன்றுவதே ... ... ன்
மன்னன்திருமகனார் வந்தாரோஉன்றனுட ... ... னே
அரசாளும்பூமுடியான் அல்லிவரவிட்டா ... ... னோ
மெத்தஅறிவுடையாள் மெல்லிவரவிட்டா ... ... ளோ
மாலைமணிமார்பன் மைத்துனனார்வந்தா ... ... னோ
பூங்குழலேயுனைத்தழுவிப் புல்கியவர்போனா ... ... னோ
மேவறுபட்டமாதரசே மெல்லியரேயுனையுமென்று ... ... ள்

[கலந்தாரி-தாதிகளைத் தூறுகிறது.]

அவ்வசனங்கேட்டு ஆரவிளமுலையா - - - ள்
காரிழையாள்மாது கலந்தாரியேது சொல்வா - - ள்
ஆருசகோடாமது ஆற்றமுடிபோகாம - - ல்
இத்தலையிலேபிடிப்புகளை என்னுடனேபேசுகிறீ - - ர்
முன்னொருவம்படுகளை மெய்குழலேசொன்னீர்க - ள்
இன்னமிபிடிப்புகளை என்னுடனேசொல்லுகிறீ - - ர்
காதிவளர்பூமுடியார் கர்னருக்கு அறிக்கையிட் - டு
ஆக்கினைகள் செய்யாமல் ஆரணங்குநானிருந்தே - ன்
ஒருவரறிந்தால் உலகமெல்லாந்தானறியு - - ம்
இருவரறிந்தால் எங்கெங்குந்தானறியு - - ம்
இந்நாள்வரையில் இருந்துவளர்ந்தோ - - மே
கூடியிருந்தோமே கொம்பனைமாரெல்லோரு - - ம்
இந்நடுவில்வந்து எவரறிந்தாரிந்தனையு - - ம்
கொல்லவினைசெய்கிறாய் கொம்பேரிடையா - - ளே
இந்தச்சிறைவைத்ததினால் எல்லோருஞ்சொல்லீ - - ரோ
தாதிபற்குளளிதமாய் தையலேநாமுனே - - ண்
என்றுமிகதுக்கித்து எந்திழையாள்சொல்லுகையி - ல்
தாதியர்களெல்லோருந் தையலன்னடையோடிவந் - து
சுத்திநிற்கும்பெண்களும் சூழ்ந்திருக்குந்தாதிகளு - ம்
செங்கமலநாயகியாள் சேரவேயோடிவந் - - து
காசிலிவர்னர் கர்னர்வரும்வேளையி - - - து
ஆரவிளமுலையாள் அழுதகுரல்கேட்டா - - - ல்
நாக்கொடுமூக்கறுப்பார் நல்லசெவிதானறுப்பா - - ர்
(என்று) மாதுதிருவடிக்கு வந்திறங்கிதெண்டனிட் - - டு
தாமக்கருங்குழலாள் தாதியருங்கூறுவா - - ள்
மாதேநீ சொலித்தாலும் மைந்தனொளித்திடு - - மோ
குலதாலிக்கப்போகாது துன்னுங்கருங்குழ - - லே
இன்னமொருதிங்கள் எந்திழையேசென்றாலு - - ம்
தானேயறியுகிறார் தங்கக்குழலா - - - ளே
(நாங்கள்) அறியாமற்சொன்னோமே-அரசேபொறுத்தருள்வீ - ர்
(என்று) மாதுதிருவடிக்கு வந்திறங்கிதெண்டனிட்டா - ர்
தாதியவள்தனிக்க தனித்திருந்தாள்தையலரு - - ம்

[கர்ணர் வேட்டைக்குப்போய்வருவது.]

காசிவீரர் கர்ணரதிகார ... ... ன்
வேட்டைக்குப்போய் மீண்டுவருகையி ... ... லே
விடாய்த்து ஒருமண்டபத்தை- வீற்றிருந்தார்கர்ணரவ ... ... ர்
இந்தகவிகேட்டிருந்தார் சீர்கருணைவீரியரு ... ... ம்
அந்தவழிதனிலே அல்லியம்மாள் தூதனவ ... ... ன்
ஓலைகொண்டுபோகிறான் உத்தமியாள் தூதுவனு ... ... ம்
ஆனந்தமாகவே ஆசாரச்சாவடியி ... ... ல்
மேளங்கள்தாளங்கள் விருதுபலமுழங் ... ... க
அவன்வரும்வழிதனிலே அதிகர்ணர்வீற்றிருந்தா ... ர்
மண்டபத்தினருகாக மாதுமையாள் தூதனவ ... ... ன்

[அல்லியுடைய தூதன் கர்ணனைக்காண்கிறது.]

வந்து அங்கேநின்று மன்னவனைத்தான்பார்த் ... ... து
யாரோதெரியாது ஆதித்தன்சந்திரன்போ ... ... ல்
யாரென்றுபார்ப்போமென்று அருகிலில்வந்துநின் ... று
கர்ணனென்றுதானறிந்து கையெடுத்துதெண்டனிட்டா ... ... ன்
அடிபணிந்ததூதனவனை யாரென்றுதான்கேட் ... ... க
ஆறாயிரவரில் ஒன்றும் அதிவீரபாண்டியர்க ... ... ள்
அணிமதுரைநாட்டுக்கு அரசுமன்னர் தூதுவன்யா ... ன்
பொன்னுமணிபழகன் புலந்திரற்குத்தூதுவன்யா ... ன்
அவர்க்குநீர்ஐயரல்லோ அதனாலேகுற்றமுண் ... ... டோ
மன்னர்திருவடிக்கு மறுபடியுந்தெண்டனிட்டா ... ... ன்

(கர்ணர் தூதனை புலந்திரன்செய்திகேட்பது.)

காசிநகர்வாழ்வர் கர்ணருந்தான்வாழ்த் ... ... தி
தூதன்றன்னைப்பார்த்துச் சொல்வாரொருவசன ... ... ம்
என்னைப்போல்மீதியே இந்திரனும்வளர்ந்தா ... னோ
நாடாளக்கற்றானோ நாமக்குலவிளக்கு ... ... ம்
செம்பொன்மணிமுடியான் செங்கோல்பிடித்தா ... ... னோ
இப்படிக்குமீதியே இந்திரனும்வளர்ந்திருக் ... ... க
வண்டார்குழலாளும் வளர்ந்துசடைத்திருக் ... ... க
தீங்கொருமுறைதான் தேன்மொழியாள்முழுகிறு ... ள்
பேடைமலர்க்கண்ணாள் பிள்ளைபெறுங்கால ... ... ம்
காவலிலேவைத்துயான் காக்கிறேன்கண்மணி ... யை
மாலைமுடியாளும் வரவிட்டாலேகா ... ... ... ப்பேன்

(கர்ணருக்குத் தூதன்சொல்வது.)

என்றுரைக்கக்கர்ணர் எடுத்துரைப்பான் றூதனவ ... ... ன்
மதுரையறுகாதம் மன்னவனும்ஆளுகிறா ... ... ன்
மற்றுமுள்ள நாடனைத்தும் மன்னர்அரசாளுகிறா ... ... ர்
அரசாளுநாயகியாள் அல்லிப்பெருமாளு ... ... ம்
காவலர்கள்பாண்டவர்கள் காடுறைந்தநாள்முதலா ... ய்
மாலைமுடிபாண்டவர்கள் வனவாசம்போனமுத ... ல்
வண்டார்குழலாளும் மயிர்விரித்தநாள்வரைக்கு ... ... ம்
மாதமொருமுறைதான் வருவாள்கொலுமுகத்தி ... ல்
என்றுரைக்கத்தூதனவன் எடுத்துரைப்பார்கர்ணரவ ... ர்
நல்லதுதானவனே நான்தங்குமண்டபத்தி ... ... ல்
போசனமாகுதுகாண் பொருந்தியமுதுண் ... ... ... டு
நடவுங்காண் தூதனென்று ராசமன்னர்சொல்லுகையி ... ல்
அவ்வசனங்கேட்டு அத்தூதனேதுசொல்வா ... ... ... ன்
உண்டுபசியாறிவந்தேன் உங்கள்கிருபையினா ... ... ... ல்
போசனங்கள்தேவையில்லை புகழ்வீராவெந்தனுக் ... கு
வெகுநேரஞ்சென்றாலே மெல்லியருங்கோபிப்பா ... ... ள்
மாதினிடகோபமதை மன்னவரேநீரறிவீ ... ... ர்
போகவிடைதாருமென்று புகழ்வீரன்தெண்டனிட்டா ... ன்

(கர்ணர் தூதனுக்கு வெகுமதிசெய்தனுப்பிவிட்டது.)

வந்துபணிந்தபொழுது மாதினதுதூதனுக் ... ... கு
உத்தரீயம்பட்டுகளும் உடுக்கநல்லஆடைதந்தா ... ர்
வாய்த்தஇலைச்சுருளும் வர்ணப்பழக்காயு ... ... ம்
காவலனும்வீரயனும் கைநிறையஅள்ளியிட்டா ... ... ன்
போகவிடைபெற்றுப் போய்விட்டான்றூதனவ ... ன்

(கர்ணர் கலந்தாரி கோட்டைக்குவருவது.)

அப்பொழுதுகர்ணர் ஆலோசனைபரித் ... ... து
காரிகையுமாது நல்லாள் கலந்தாரிநாயகிக் ... ... கு
(அவள்) மைத்துனர்மீறி வளர்ந்தஅருமைகளு ... ... ம்
அரிவையற்குச்சொல்லி அறிக்கையிடவேண்டுமென் ... று
தன்மனதுக்குள்ளே தார்வேந்தர்தானினைந் ... ... து
மேளவகைகளும் விருதுகள்கையமர்த் ... ... தி
விருதுபலமுழங்க வீதிபுறப்பட்டா ... ... ர்
மாதினதுகோட்டைக்கு மன்னவரும்போய்ப்புகுந்தா ... ர்
வாசற்படிநெட்டும் வைத்திருக்குமுத்திரையு ... ... ம்

சேரவேதான்நிறைந்து செம்பொன்மணிமுடியா
உத்தமனும்வீரியனும் உட்கட்டிற்போய்ப்புகுந்தா
காலுக்குநீர்வார்த்தார் காரிழைமார்தாதியர்க
பாவையழகியரும் பட்டாலடிதுவட்
மாணிக்கஆசனங்கள் மன்னருக்குத்தான்போட்டா
இட்டதொருஆசனத்தில் இன்பமுடன்வீற்றிருந்தா
வந்தஇளைப்பாற மன்னர்திருமுகம்மு
கவுரியணிமாதினர்கள் கட்டழகிதாதியர்க

(கர்னர் கலந்தாரியைத் தாதிகளைவிட் டழைப்பது.)

தமக்குக்கவுரியிட்ட தாதிமுகம்நோக்
அரசாளுநாயகியாள் அல்லித்திருமகளை
போர்க்கஞ்சாவீரனவன் புலந்திரனார்தேவிய
காரிழையாள்மாது கலந்தாரிநாயகத்
ஆரமுலையாளை அழைத்தோடிவாருமென்று
தன்கையில்கவுரியை தானொருத்திகைக்கொடுத்
மங்கையவள்பள்ளிகொண்ட மண்டபத்திற்போய்ப்புகுந்தா
திருவேஉருவழகே செல்வப்பெருந்தே
அத்திநகருடைய அலங்காரப்பூஷிண
அன்னமேயும்முடைய அம்மானும்வந்தார்கா
மங்கையரேயும்முடைய மாமனும்வந்தார்கா
காசிநகராளும் கர்னரிங்கேவந்தார்கா
மாலைமுடிமார்பர் மண்டபத்தில்வந்துநின்
உம்மையழைத்துவர உத்தரவுசொன்னார்கா

(கலந்தாரி-கர்னரைக்காண்கிறது.)

அவ்வசனங்கேட்டு அலங்காரப்பூஷணியா
தாமக்கருங்குழலாள் தாதிகளைத்தானேன்
காரிழையாள்மாது கைலாகுதான்கொடுக்
மெத்தனவேதானடந்து வேல்புருவங்கண்ணாளு
மாமனவர்வந்திருக்கும் மண்டபஞ்செல்றேறி
மாமனார்பாதமது வணங்கியேதெண்டனிட்டா
வந்துபணிந்ததொரு மருமகளைத்தான்பார்த்
வாழ்வாய்வளருவாய் மாயனடிபெறுவா
மகாலட்சுமிபோல மங்கிலியமுண்டா
துரையெல்லாமாள்வதற்கு மைந்தனைப்பெற்றிடுவா

வாழ்த்திவிடைகொடுக்க மாதருருங்குழலா ... ... ள்
மாணிக்கத்தூண்டறைவில் மங்கையரும்போயொளித்தா ... ள்

(கர்ணர் கலந்தாரியைக் கேட்பது.)

காதிவிவர்ணர் கர்ணரவர்தாம்பார்த் ... ... து
மாதுமையாள்சாகிருலிக்க மன்னவருமேதுரைப்பா ... ர்
நாணமறிந்தாயோ நாமக்குலவிளக் ... ... கே
வெட்கமறிந்தாயோ மேல்புருவங்கன்று ... ளே
நாணமும்வெட்கமும் நாயகமேமகற்று ... ... யோ
நீயேயறிந்தாயோ நேரிழையேபுத்திர ... னை
காரிழையேபுத்திரனுக்குக் கற்பித்தார்யாரோதா ... ன்
(உன்)மைத்துனனார்மீறி வளர்ந்துஇருக்கிறா ... ர்
நாடாளக்கற்றாரும் நாமக்குலவிளக் ... கு
செம்பொன்மணிமுடியான் செங்கோல்பிடித்தாரு ... ம்
என்னைப்போல்மீறி இந்திரனைவளர்த்தாரு ... ம்
வாராதிருந்தானே வளவில்ஒருபாண ... ... ம்
வண்டார்குழலாளை வாழாப்பெண்ணாக்கிவைத்தா ... ன்
ஆனந்தமார்பனை ஆள்விட்டுவரவழைத் ... து
விசையன்திருமகனை விலக்குகள்போடவைப்பே ... ன்
என்றுமிவருரைக்க எந்திழையாள்தான்பேசா ... ள்
எதிட்டுப்பார்த்தாராம் இந்திரனார்தேவிய ... ... ரை
காலைத்தொடங்கிமேப கரியகுழலவளவா ... ... ய்
பார்த்தார்பலகாலும் பார்த்தன்மருமக ... ... னை
திருமாமுடியழகன் தாதியரைத்தானழைத் ... ... து
(இவள்)மைபெழுதுங்கண்ணாள் மலர்சொரியுஞ்செவ்வாயா ... ள்
சந்திரவுதயம்போல் தனும்புகிறதிருமுகங்க ... ... ள்
தேறியிருப்பதென்ன செண்பகப்பூமேனியெல்லா ... ம்
அலர்ந்தசெந்தாமரைபோல் ஆரணங்குதிருமுகங்க ... ள்
மலருந்திருமுகங்கள் வாடியிருப்பதென் ... ... ன
தாமக்குழல்மாரோ தாதிகளேசொல்லுமென்று ... ர்
ஆடைகுறையாச்சோ ஐவர்மருமகட் ... ... கு
ஆரமுலைபாட்கு ஆபரணங்குறைச்சலுண் ... டோ
எதனாலேவாடினாள் எங்கள்குலவிளக் ... ... கு
மதுரைக்குப்போக மங்கையரும்நினைத்தா ... ளோ
மைத்துனனைத்தானும் மாதுநினைத்ததுண் ... ... டோ

வண்டணியுங்குழலாள் வாடியிருப்பதென் ... ன்
இது வென்னகருமம் எனக்கறியக்கூறுமென்று ... ரீ
தாமக்கருங்குழலாள் தாதியவளோது சொல்வா ... ள்
வேறொன்றுமில்லை ஐயா வேந்தர்பெருமா ... னே
தாரார்குழலுடையாள் தலைநோகுதென்று சொலி ... வி
உள்ளே இருந்தாள் காண் ஒன்றிரண்டு நாளாச் ... சு
கர்ணரதுகேட்டுக் காரிழையே தாதிக ... ... ளா
எந்தனுக்குச் சொல்லாமல் இருந்தகருமமென் ... ன
(உங்களை)சிறையிலே வைத்திடுவேன் சீர்பதமாத்திரம்வைப்பே ... ன்
தலையைச்சிறைத்து நான் தாள்விலங்குபோட்டுவைப்பே ... ன்
(என்று)எதிட்டுப்பார்த்தாராம் இந்திரனார்தேவிய ... ரை
காலைத்தொடங்கியே கரியகுழல்ளவா ... ... ய்
பார்த்தார்பலகாலும் பார்த்தன்மருமக ... ... னோ
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியரைத்தானழைத் ... து
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதுகா ... ண்
பேடைமலர்க்கண்ணாட்குப் புத்திரராய்த்தோன்றுதுகா ... ண்
மன்னர்திருமகனும் வந்தானோயிவ்விடத்தி ... ல்
வாழ்விசையன்புத்திரனும் வந்தானோஉறவா ... க
கற்கோட்டைமூத்திரையுங் காவலர்கள்விழித்திருக் ... க
ஆகாயமார்க்கத்தில் அந்தரமாய்வந்தா ... ... ரோ
மாதுமணவாளன் வந்தாரோசொல்லுமென் ... று
கர்ணரவர்கேட்கையிலே காரிழைமார்கூறுவா ... ர்
நூலால்கடுந்திரளார் நூற்றுவர்க்கும்பிள்ளையில் ... லை
மகராஜராஜருக்கு மைந்தன்பிறகுமில்லை - - யே
யாரைநீர்கண்டீர் அடையாளம்நீர்பார்த்தீ - - ர்.

[கர்ணர் தாதிகளைக்கேட்பது:]

(நீர்) கண்டகுறிப்பை கருத்துடனே சொல்லுமென்று - ள்
காசிவர்னர் கர்ணரவரோது சொல்வா - - - ர்
வண்டார்குழலாட்கு மைந்தனேதப்பா - - - து
மாதுமணவாளர் வந்தகுறிகாணே - - மே
மதுரைதுரைமகனும் வந்ததுமில்லையென் - - று
எந்திழைமார்நீங்கள் என்மேலேதீங்கிழைவி - - இ
தாமக்கருங்குழல்மார் தாதியரும்பூப்பியரு - - ம்
சேரவேயோடிவந்து சேயிழைமாரெல்லோரு - - ம்

காசிலிவர்னர் கர்னரோயும்மா - - - - ணை
உன்மேலேயாணைபடி ஒருகுறையும்நாமறியோ - ம்
[கர்னர்சாருகள்மேற்கோபிப்பது.]
காசிலிவர்னர் கர்னிருங்கண்சிவந் - - து
(அவனுக்கு) ஒற்றைப்பணுதியிட்டு உத்தரீயபட்டுடுத் - தி
ஆபரணமிட்டு அழகாகப்பட்டுடுத் ... ... தி
வைத்தேனேயுங்களை மங்கையர்க்குக்காவலா ... யி
சொல்லுதற்குவைத்தேனே நேரிழையிளங்கொடி ... யே
ஆடைகளைபுமெய்யூர் ஆபரணம்வாங்குமென்று ... ர்
திரளானஆபரணம் சேரக்கழட்டுமென்று ... ... ர்
பாவாடைப்பாட்டை பைங்கிளிமார்நீங்கிருங்க ... ... ள்
மாணிக்கப்பேழையிலே வைத்தேனேஉங்களைநா ... ன்
ஆக்கினைகளில்லையே அலைதாரன்பட்டணத்தி ... ... ல்
வாசல்பேரத்தனையும் வகையறவெட்டிடுவே - - ன்
இந்நாடாளுகிற சித்தரசன்மன்னவ - - னே
தோரணக்கழுவில் சுந்தரனாபோட்டிடுவே - ன்
உத்தமிமாருங்களை உன்துண்டில்போட்டிடுவே - ன்
என்றுமிகக்கோபித்து எதிபறந்துகண்சிவந் - - து
வாளையுருவிக்கொண்டு மன்னவரும்புறப்பட்டா - ர்
வாசற்படிகடந்து மன்னர்பெருமானு - - ம்
மைத்துமொருநினைவாய் மன்னவனுந்தானினைந் - து
(அவள்) ஆச்சியரைக்கேட்டு அறிந்துமேநாம்வருவோ - ம்
(என்று) வாளையுமுறையிலிட்டு மன்னரறிகருணை - - ர்
தருமருடியழகன் தலைவாசல்தான்கடந் - - து
[கர்னர் சுலந்தாரியின் தாயாரைக் கேட்கவருகிறது.]
கர்னர்வருகையிலே காளையந்தபுத்திரனு - - ம்
(அவன்) சேனைபரிகலமும் திரளுமனுவுட - - னே
வந்துபணிந்தபொரு மகனையும்பாராம - - ல்
கோபமுடனேயந்த கொற்றவனும்தானடந்தா ... ர்
மாதினதுகோட்டையை மன்னவனுங்கிட்டிவந்தா ... ர்
துன்னுங்கருங்குழலாள் தூர்ச்சடைபாலப்போ... ... ... து
மேளவகையும் விருதுடனேமெல்லிமரு ... ... ம்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழியாள்தங்களுட... ... ன்
மாதினதுகோட்டையை மன்னவனுங்கிட்டிவந்தா ... ர்

தண்டிகைவிட்டிறங்கி கருமமுடியாளு ... ... ம்
உத்தமனார்வீரியரும் உட்கட்டிற்போய்ப்புகுந்தா ... ர்
தாமக்கருங்குழலாள் தாதி யெதிர்கண் ... ... டு
(இவர்) வந்ததொருகாரியம் மாகேதெரியா - - து
ஆலாத்திக்காட்டாமல் அரிவையரோ நாமிருந்தோ - ம்
என்றுமிகதாதியர்கள் எல்லோரும்ஓடிவந் - - து
காலுக்குநீர்வார்த்து கட்டழகிதாதியர்க ... ... ள்
பாவையழகியர்கள் பட்டாலடி துவட் ... ... . டி
கவுரியரிமாறினார் காரிழை மாரப்பொழு ... ... து
தனக்குக்கவுரியிட்ட தாதிமுகம்நோக் ... ... கி
துன்றுங்கருங்குழலே தூர்ச்சடையா ளெங்கேயென்று ... ... ர்
அவ்வார்த்தைகேட்டு அரிவையர்களோடிவந் ... து
துன்றுங்கருங்குழலாள் தூர்ச்சடையாளண்டைவந் ... ... து
தெண்டனிட்டார்தாதியர்கள் தேனார்குழலாட் ... ... கு
துன்றுங்கருங்குழலாள் தூர்ச்சடையாள்தான்பார்த் ... து
எங்குவந்தாய்தாதி எனக்கறியகூறுமென்று ... ள்
கர்ணர்வந்தாரென்று காரிழையாள் சொல்லுகையி ... ... ல்

[கர்ணனைக்காண - தூர்ச்சடை வருகிறது.]

கர்ணர்வந்தாரென்றவுடன் கடிதெழுந்திருந் - - து
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின் - - ன
முத்துமினுமினென்ன மோதிரக்கால்பொன்னுதி - - ர
மாதுநடையசைந்து வந்தாள்மயிலம்போ ... ... ... லே
காசிவளர்பூபதிக்கு கட்டழகிதெண்டனிட்டா ... ... ... ள்
கர்ணராஜபாதத்தில் கட்டழகிதெண்டனிட்டா - - ள்
வந்துபணிந்தவளை வாழ்த்தியந்தமன்னவனு ... ... ... ... ம்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் மண்ணாளிக்காலமட்டு ... ... ... ம்
வாழ்ந்திருப்பீரென்று மனங்குளிரவாழ்த்தினா ... ... ... ... ர்
ஆசனம்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்க ... ... ... ள்
இட்டதொருஆசனத்தில் இருந்தாளிளங்கொடியு ... ... ம்
அங்கவனைநாட்டார் அதிகருணைதிருமுகத் - தை
எறிட்டுப்பார்த்தாளே இவருடையதன்முகத் - தை
(அண்ணா) வாடியிருப்பதென்ன மன்னர்திருமுகங்க - ள்
சிரித்திருப்பானேன் செண்பகப்பூமேனியெல்லா - ம்
அலர்ந்தசெந்தாமரைபோல் அண்ணாவேதிருமுகங்க - ள்

கருகியிருப்பதென்ன கர்னர்பெருமா ... ... னே
மாறுகங்கொண்ட மன்னன் திரிகீயாதிர ... ... ன்
ஆடரவங்கொண்ட அரசன் திரிகீயாதிரனு ... ... [illegible]
இடும்பனைவாளுமன்னே ஏதாகிலுஞ்சொன்னா... ... னோ
ஏதாகிலும்உம்மை இகட்சிகள் சொன்னா ... ... னோ
என்னகருமமிது ஏயக்கறிபச்சொல்லுமென்றா ... ள்
என்றுஅவள்கேட்க எடுத்துரைப்பார்மன்னவரு .. ... ம்

(கர்னர் தூர்ச்சடைக்குச்சொல்வது.)

(எனக்கு) பத்தினிபாள்சாபம் பலிப்பதற்குமுன்னா ... [illegible]
அரசாளுநாயகியாள் அல்லிதிருமகனா ... ... ம்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனா ... ... ம்
இந்திரனார்கீசவி என்னைமதிபோனா ... ... ளே
தாமக்குழலாளென் தலைக்குவினைசெய்தா ... ... ளே
வேல்பொருந்துங்கண்ணாளும் வெட்டவினைசெய்தா ... ளே
என்றுரைக்ககர்னர் எதுரைப்பாள் தூர்சசடையு ... ... ம்
மாதுநல்லாளிப்பொழுது வன்கொடுமைசெய்காக்கா ... ல்
வேல்பொருந்தும்அல்லியம்மாள் வெட்டியெறிந்திடுவா ... ள்
(நீர்) அத்திபுரத்தை அரசாண்டிருக்காம ... ... ல்
(நீர்) மாளுநிறக ரிபமீமன் மன்னர்பெருமா ... னே
என்னகருமம் எயக்கறிய சொல்லுமென்றா ... ...ள்
காசிலிவர்னர் கர்னரவர்ோது செல்வா ... ... ர்
காரிகையாள்மாது கலந்தாரிநாயகிக் ... ... கு
பொல்லாமசக்கைகள் பொருந்திற்றுபொற்கொடிக் ... கு
ஆகாமசக்கை ஆரிகைக்குஉண்டாச் ... ... சு
வண்டாரிகுழலாட்கு மைந்தனாய்த்தோன்று ... ...று
மதுரைப்பெருமாளும் வந்ததுங்கானே ... வே
என்னகருமமோ என்றாிகர்னரவ ... ... ர்
துன்னுங்கருங்குழலாள் தூர்ச்சடையாள்கூறுவா ... ... ள்
மாதுமணவாளன் வந்தால்வரவேணு .. ... ... ம்
(உமது) மைந்தன்புலந்திரனார் மன்னவர்தான்வரவேண்டு ... ம்
மற்றுமொருமன்னவர்கள் வருவாரோகாவலி .. ... லே
வாசற்றடைதாண்டி வருவாரொருவருண் ... ... டோ
தாதியர்கள்உமக்கு தையலர்கள்சொல்லலை ... ...யோ

தாதியரைக்கேட்கிலையோ தார்வேந்தாவென்றுரைத்தா ...
தங்கையவள்சொல்லுகையில் தனஞ்சயனார்கூறலுற்றா ...
தாதியரையெல்லாம் தனித்தனியேகேட்டுவிட்டே ...
தங்களாலறியேனென்று-தன்மேலேயாணையிட்டா ...
துன்னுங்கருங்குழலாள் தூர்ச்சடையுந்தான்கேட் ...
மாதுதிகைத்திட்டு வயிறுமொருகைபிசைந் ...
இழைநகைகள்நொறுங்கும் இளங்கொடியேயயின்றோ ...
யார்சொல்லுங்களோனே அரவக்கொடிவேந்த ...
(என்று) ஆரவிளமுலையாள் அறைந்துகொண்டுதானழுதா ...

(தூர்ச்சடையாள் கலந்தாரியைக் காணவருகிறது.)

ஆரணங்குமவள்சேதி அறிந்துவருவேனென் ...
மெல்லபுருவங்கண்ணாளும் வேந்தனார்கையமர்த் ...
மன்னனார்க்கையமர்த்தி மாது வெளியில்வந்தா ...
தண்டிகைகொண்டுவந்தார் தாமக்குழலாட் ...
தாமக்குழலாளும் தண்டிகைமேலேறினா ...
வண்டார்குழலாளை மறைத்தார்கள்குடையதினா ...
சுற்றிப்பிரம்படிக்கத்-தோழியர்கள்சூழ்ந்துவ ...
மாரிப்பிரம்படிக்க மங்கையர்கள்முன்னடக் ...
மாளிகைக்குக்கோட்டையண்டை மங்கையரும்வந்துவிட்டா ...
வாசற்படியினெட்டும் வைத்திருக்குமுத்தினாயு ...
சேரவேகதவுதிறந்து கேசனார்குழலாளு ...
[illegible]டிகைவிட்டிறங்கித் தையலந்ததூர்ச்சடையா ...
[illegible]ரிக்கண்ணாளும் உட்கட்டிற்போயிப்புகுந்தா ...
[illegible]குழலியர்கள் தாதியர்களெதிர்கண் ...
[illegible]லுக்குநீர்வார்த்தார் காரிகைமார்தாதியர்க ...
பாவையழகியரும் பட்டாலடிதுடைத்தா ...
வந்தஇளைப்பாற வான்கவுரிவீசினார்க ...
மாணிக்கஆசனத்தில் மங்கையரும்வீற்றிருந்தா ...
தாதிமுகம்நோக்கித் தையலருமேதுசொல்வா ...
காரிகையாள்மாது கலந்தாரிநாயகத் ...
ஆரமுலையாளை அழைத்துவாயிங்கேயென்று ...
[illegible]கையிற்கவுரியைத தாதொருத்திகைக்கொடுத் ...
வீசங்கவுரிதன்னை வேறொருத்திகைக்கொடுத் ...
மங்கையரும்பள்ளிகொண்ட மண்டபமேபோய்ப்புகுந் ...

அழகேதிருவுருவே அலங்காரப்பூஷண ... ... மே
அன்னமேசொன்னமே அமிர்தமடமா ... ...னே
சாந்திக்கழுத்தியரோ சந்தனப்பூமேனிய ... ... ரே
ஆரணங்கேயும்முடைய ஆச்சியழைக்கிருள்கா ... ண்
ஆச்சியென்றுசொல்லுகையில் அதிகமனமகிழ்ந் ... து
பூவணையைவிட்டிறங்கிப் பொற்கொடியாள்நாயகியு ... ம்
மாதாவின்பாதமது வணங்கவேவேண்டுமென் ... று
வண்டார்கருங்குழலாள் மலரணையிற்பூவெடுத் ... து
காடக்குழலாளும் தாதியரைத்தோளுடன் ... ... றி
காரிகைமாதருக்குக் கைலாகுதான்கொடுக் - க
மெத்தெனவேதானடந்து வேல்பொருந்துங்கண்ணாளு - ம்

(ஆர்ச்சனையாளை புத்திரிகண்டது.)

மாதாவுமீற்றிருக்கும் மண்டபஞ்சென்றேறினா - ள்
வந்துபணிந்தொரு மகளானைவாழ்த்துகிறா - - ள்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் மாயனடிபெறுவீ - - ர்
அத்திபுரமாள அரசுகளைப்பெற்றிடுவீ - - ர்
கண்களின்மேலொத்திக் கனிவாயைமுத்தமிட் - - டு
கற்பூரந்தின்னவொரு கனிவாயைத்தான்முகந் - து
வண்டார்குழலாமோ வாய்நெருடிமுத்தமிட் - - டு
வறிட்டுப்பார்த்தாள் இளங்கொடியாள்சீர்வடி - வை
பார்த்தாள்பலகாலும் பார்த்தன்மருமக - - ளை
காசினியோர் கர்னருரைத்ததெல்லா - - - ம்
பொய்யென்றிருந்தேன் புகழ்வீரன்சொன்னதெல்லா - ம்
மெய்யாகத்தோன்றுதே வேல்புருவங்கண்ணா - ளே
சத்திநிற்கும்பெண்கள் சூழ்ந்திருக்குந்தாதியர்க - ள்
அங்கவனைக்கண்காட்டி ஆரமுலைபாலு - - ம்
கூறுவாள்வாய்திறந்து கொம்பனையைத்தான்பார்த் - து
வண்டார்குழலாளே மைந்தராய்த்தோன்றுதுகா - ண்
பேடைமலர்க்கண்ணாளே பிள்ளையாய்த்தோன்றுதுகா. - ண்
மன்னர்திருமகனோர் வந்தாரோயிவ்விடத்தி - - ல்
வாழ்விசையன்புத்திரனோர் வந்தாரோஉளவா - - ய்
கற்கோட்டைமுத்திரையுங் கர்னராறுகாவலி - - லே
அரசாளும்பூமுடியாள் அல்லிவரவிட்டா - - ளோ
ஆகாயவான்புரவி அவரேறிவந்தா - - - ரோ

(உமது)மைத்துனனார்வந்த வாறெனக்குச்சொல்லுமென்று - ன்
(என்)கணணாட்டிநாயகளா கண்ணுமேடாமோ - ணே
மாதுமணையாளருக்கு மருவிட்டுப்பாரோ - - ணே
மலைமுடியாளா மன்றயனைவைத்துப்பாரோ - - ணே
வகாந்தமாக எனக்கொருக்காலசொல்லா - - மோ
மைத்துனனார்வந்த வகையெனக்குச்சொல்லுமென்று - ள்
(அவள்)வார்த்தைகள்பேசாள் மறுவார்த்தைதானுரையா - ள்
பூஞ்சிலம்பைப்பார்த்து புனக்கிளியும்தானிருப்பா - - ள்
கண்டாளே துர்ச்சடையாள் கல்வியதுமவனத் - தை
காசிலிவர்னர் கர்னர்பெருமானு - - - ம்
மானுகிறனென்று வாளுருவிகைப்பிடித் - து
ஆயுதம்நாட்டி அலைதாரன்மானுகிறு - - - ர்
காசிலிவர்னர் கர்னரோமாண்டாக்கா - - - ல்
மகாராசராசர் மன்னவர்கள் நூற்றுவரு - - - ம்
சேரவேமாளுவார் செம்பொன்முடியரச - - ர்
உங்களையர்தன்முதலாய் உன்தாயார்நாள்முதலா - ய்
(நாங்கள்)அத்தனை பேரும் அழியத்திருவுள - மோ
மாளத்திருவுளமோ வண்டார்குழலா - - ளே
மைத்துனனார்வந்த வாறெனக்குச்சொல்லுமென்று - ள்
(இவள்)வார்த்தையுரையாள் மறுவார்த்தைதான்பேசா - ள்
(தன்)பூஞ்சிலம்பைப்பார்த்து புனக்கிளியும்தானிருப்பா - ள்
துன்னுங்கருங்குழலாள் துர்ச்சடையுங்கூறுவா - ள்
மகாராசராசாக்கள் மன்னவர்கள்தம்மா - ணை
அரசாளும்நாயகியாள் அல்லித்திருவா - - ணை
வனவாசம்காத்துறையும் மங்கையர்திருவா - - ணை
மாதுகுழல்விரித்த மயிலனையாள்திருவா - ணை
(உன்)மைத்துனர்மேலாணைகள்மீர் மாதரேசொல்லுமென்று - ள்
என்னாணைமாதரசே எனக்குரைக்கச்சொல்லுமென்று - ள்
மைத்துனர்மேலாணையிட மாதருங்கோபித் - து
வண்டார்குழலாள் மலரணையைவிட்டிறங் - - கி
பள்ளிகொள்ளுமண்டபத்தை பைங்கிளியும்உட்புகுந்தா - ள்
ஈரூவணையில்கைக்கொடுத்து தையலருஞ்சார்ந்திருந்தா - ள்
துன்னுங்கருங்குழலாள் துர்ச்சடையுந்தான்பார்த் - து
மாதுதிடுக்கிட்டு வயிற்றையொருகையிலைசந் - - து

இழந்தோமேநாளும் இளங்கொடியையிந்நேர - ம்
ஆரடிமயிலையாளும் அழகியகன்றூத்துதிர்த்தா - ள்
தாமக்குழல்மங்கையர்கள் தாதியர்கள்வந்தாரின் - - று
மாதிருக்குமண்டபத்தை மங்கையர்கள்போய்ப்புகுந் - து
இந்தஆணைக்கும் இருந்தீர்தாய்மடிமே - லே
மைத்துனர்மேலாணையிட வந்துவிட்டீர்கோபித் - து
(உமது)மைத்துனரிங்கே வந்தபடிதப்பா - து
ஆணைபுகர்இந்திரனார் வந்ததாய்த்தோன்று - று
காசிலிவர்ணர் சீரார்பெருமானு - - ம்
டாருமேயென்று சொல்லி வாளுருவிக்கைபிடித் - து
ஆயுதம்நாட்டி அவரிருக்கப்பூங்கொடி - - யே
அங்குநிசைநாட்டான் அவர்பாண்டராமாளு - ல
மகாராசராசாக்கள் மன்னவர்கள் நூற்றுவரு - - ம்
சேரவேவமாளுவார் செம்பொன் மணிமுடியா - - ர்
(உங்கள்)ஐவர்முதலாக ஆசிரியருந்தான்கூ - - ட
ஆரணங்கேநாங்கள் ஆயிரம்பேர்தாதியரு - ம்
இத்தனைபேர்மாள இழக்கத்திருவுள - - மோ
மாளத்திருவுளமோ விண்டார்குழலா - - ளே
மைத்துனர்வந்த வகைபிரித்துச்சொல்லா - - யோ
அதுக்குமவர்பேசாள் அல்லிமருமகளு - - - ம்
பார்த்தார்கள்தாதியர்கள் பைங்கிளிமாலெல்லோரு - ம்
(உமது) மைத்துனர்மேலாணை மாதரேசொல்லுமென்று - ர்
தாய்ப்பால்வளர்த்தெடுத்த தாதிய்வள்சொல்லுகையி - ல்
ஆரணங்கேநீரும் ஆணைவிடும்சொல்லுகிறே - - ன்
(நீர்) சொன்னபிறகல்லவோ தோகையாணைவிடுவது நா - - ன்

(கலந்தாரி-தாதிகட்குச்சொல்வது.)

காரிழைபாள்மாது கலந்தாரியேதுரைப்பா - - ள்
முழுகிய நாலாளும் முருகுகுழலெல்லோரு - ம்
உடனுகப்பள்ளிகொள்ளும் உண்டானப்பெண்களெல்லா - ம்
பாதியிரவுசென்று பதினைந்துநாழிகைமே - - - ல்
வீசுதுகாலமேனியெல்லாம் வெகுநெருப்பாயெங்களுக் - கு
மண்டபத்திற்கூடத்தில் மாதாவேபள்ளிகொண்டோ - ம்
அன்றையராத்திரியில் அருச்சுனனார்புத்திரரு - - ம்
ஆகாயவான்புரவி அவரேறிஅலைந்தா - - - ன்

யாருமறியாமல் அங்கொருவர்காணாம - - - ல்
சந்தனமுங்குங்குமமும் சவ்வாதுபரிமளமு - - ம்
வகைவகையாய்ப்பூஷணங்கள் வகையுடனேதான்கொடுத் - - து
அன்றையராத்திரியில் அவர்வந்துபோனார்கா - - ணே
அடையாளந்தான்கொடுத்து அவர்போனார்தென்மது - - ரா
எங்கேஅடையாளம் என்றுமேளதாதியவ - - ள்
மாணிக்கப்பேழையிலே மாதரோகட்டிவைத்தே - ன்
இத்தனைஆக்கினைக்கி இருந்தீர்தாய்மடிமே - - ல்
மைத்துனர்மேலாணையிட மாதரசேகோபித்தீ - - ர்
மகாராஜராஜாக்கள் மன்னவர்மேலாணைவிட்டே - - ன்
வனவாசங்காடுறைந்த மாமன்மார்ஆணைவிட்டே - ன்
மாமியார்பாஞ்சாலி மயிலனைமேலாணைவிட்டே - ன்
அரசாளும்நாயகியாள் அல்லிமேலாணைவிட்டே - ன்
(உமது) மைத்துனனாராணை மயிலனையேமுக்காலும்விட்டே - ன்
ஏலங்குழலாளே இருமென்றெழுந்திருந்தா - - ள்
ஆன்றுங்கருங்குழலாள் ஆர்ச்சடையாள்தானிருக்கு - ம்
மாதிருக்குமண்டபத்தை மயிலனையாளோடிவந் - து
மதுரைப்பெருமானும் வந்தராம்மறவா - - க
யாருமறியாமல் அருச்சுனனார்புத்திரரு - - ம்
அடையாளந்தான்கொடுத்து ஆணழகர்போனாரா - - - ம்
மாணிக்கப்பேழையை மாதரதுமுன்னேவைத்தா - - ள்
அல்லிக்கயிறும் அழுத்தியசீருவு - - - ம்
சீருவுங்கச்சை திருமுடியுந்தானெடுத் - - து
அல்லியடையாளமென்று அரிவையவள்சொல்லலு - மே
ஆணிப்பொன்னாலே அழுத்திட்டஅடையாள- - - ம்
சபதம்முடித்தாரோ தருமமுடியாரு - - - ம்
இப்படிக்குமீறி இந்திரரும்வளர்ந்தா - - ரோ
ராமக்குலவிளக்கு நாயகனார்வீரியரு - - - ம்
செம்பொன்முடியாரும் செங்கோல்முடித்தா - ரோ
முத்திரைமோதிரத்தை முருகுகுழலாள்தானெடுத் - - து
கட்டழகன்மோதிரத்தை கண்களிலேதானொத் - - தி
பவுத்திரமோதிரத்தை பைங்கிளியாள்தானெடுத் - - து
கன்னமலைநாயகரோ காணேனென்றிருக்காலு - - - ம்
மாதுமணவாளன் வந்ததைப்பாரே - - - னே

காவலர்கள்வீரியனைக் கண்ணுமேலயாரோ - - ரோ
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்காணும - - - ம்
போதவருந்தடங்கண் பொன்னுருகியாளையத்தி - - ல்
யாராமற்போனேனே பாவிநானுனே - - னே
கா ணுதிருந்தேனே கண்ணற்றுளானே - - னே
கண் ம் நாமுமிந்த கட்டழகிநின்னையத் - - தை
(ஒரு) பறிந்தாளோ தையலதுதன்னடத் - தை
(என்று) கங்குளிர்ந்து இருதோளும்பூரித் - து
பூட்டுமிக்வி காய் பொன்னாபரணமெல்லா - - ம்
(எங்கள்) அண் க்குச்சொல்லி அறிக்கையிடவேண்டுமென் று
தண்டிகைமேயேலறினள் தாமக்குழலாளு - - - ம்
(தூர்ச்சலடையாள் கர்ணருக்குச்சொல்லவருகிறது.)
சுற்றிப்பிரப்படிக்காரர் சூழ்ந்துவர அரிவையந் - - து
ஆயிரம்பேர்தாதியர்கள் அருகினிலேபுடைசூ - - ழ
எறிப்பிரம்படிக்க ஏந்திழைமாரெச்சரிக் - - - கை
மாறிப்பிரம்படிக்க மண்டபஞ்சென்றேறினு - - ள்
தண்டிகைவிட்டிறங்கித் தாமக்குழலாளு - - - ம்
ஆரவிளமுலையாள் அரண்மனையிற்போய்ப்புகுந்தா - ள்
அங்குதேசாதிபதி அதிகர்ணர்பெருமானு - - ம்
எதிர்ப்பார்த்தார் இளங்கொடியாள்சீர்வடி - வை
அலர்ந்தசெந்தாமரைபோல் ஆரணங்குதிருமுகங்க - - ள்
தர்மமுடிப்பாரும் தலைகுப்பவிட்டா - - ரே
வேல்பொரு ங்கண்ணாளும் வெட்டுதலைவிட்டா - ளோ
என்னகருமந்தங்கை எனக்கறியசொல்லுமென் று - ர்
அஞ்சாதே அஞ்சாதே அண்ணுவேயஞ்சா - - தே
மதுரைத்துரைமகனும் வந்தார்மறவா - - க
(உன்)மைந்தர்புலந்திரரும் மாதினிடம்வந்தார்கா - - ண்
யாருமறியாமல் அலிகாரன் அங்குவந் - - - து
அடையாளந்தான்கொடுத்து அல்லிமகன்போனுரா ... ம்
அரசுமன்னர்வைத்த அடையாளமென்றுசொல் ... .. லி
மாணிக்கப்பேழையை வைத்தாளேமுன்னிலையா ..... ய்
ஆணிப்பொன்னுமேலே அழுத்திமேயதுப்பியிட் ... ... டு
மாத்தாயிரம்பொன்பெற்ற மாணிக்கவஞ்சவர ... ம்
கண்டோரடையாளம் கர்ணர்பெருமானு ... ... ம்

இப்படியாய் மீறியே இந்திரரும்வளர்ந்தா ... ஞே
நாடாளக்கற்றமின்று இராஜக்குலவிளக்கு ... ... ம்
ஊராளக்கற்றமின்று உத்தமசிகாமணியு ... ... ம்
செம்பொன்மணிமுடியான் செகதாடுபூண்டா ... ஞே
தென்னைமுடிவேந்தன் செங்கோல்பிடித்தா ... ஞே
மன்னர்திருமகனும் மண்டலத்தையாள்கிறு ... ஞே
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்தாமெடுத் ... ... து
கட்டழகன்மோதிரத்தைக் கைதனிலேதானணிந்தா ... ... ர்
சரியாயிருந்ததுவே தருமமுடியார்க் ... ... கு
பவித்திரமோதிரத்தைப் பார்வேந்தர்தான்கழட் ... ... டி
கட்டழகன்மோதிரத்தைக் கன்னலிலொத்திக்கொண்டா ... ர்
மாதுமணவாளன் வந்தபடியாமோ ... ... ... ஞே
மகாராஜராஜாவை வைத்திருந்துபாமோ ... ஞே
மைந்தன்புலந்திரன்றன் வடிவழகைப்பாமோ ... ... ஞே
மாதுமணவாளனுக்கு மருவிட்டுப்பாமோ ... ... ஞே
காளையர்க்கேற்ற கன்னற்றனின்னை ... ... னே
பாராதிருந்தேனே பாவிநானும்மை ... ... டு
முத்திரைமோதிரத்தை முடிமன்னர்கையிலிட் ... ... ர்
மற்றும்அடையாளம் பருமகோகாட்டுமென்று ... ... ழ
காட்டினாள்அடையாளங் கர்னர்மனயகி ... ... ழ
அடிசலருமேவனே ஆர்சுதுகாண அண்ணு ... ... வே
உண்டிபசியாறி உத்தமனேநடவுமென்று ... ... ள்

[கர்னர் புறப்பட்டு வருகிறது.]

அங்குதேசாதிபதி அதிகர்ணமோது சொல்வா ... ... ர்
மகாராஜராஜாக்கள் மன்னவர்கள் நூற்றுவரு ... ... ம்
சும்மாவிருப்பார்கள் துன்னுங்கருங்குழ ... ... லே
அங்கேஅடிசல் அமுதுண்டேபன்றங்கைய ... ... ர்
எலங்குழலியமோ இருந்தென்றெழுந்திருந்தா ... ... ர்
வேந்தரதிகருணர் வெளியேபுறப்பட்டா ... ... ர்
வேட்டைப்பரிகலமும் வேந்தனதுசேனைகளு ... ... ம்
காட்டில்வருமானுகளுங் கானகமயிலுகளு ... ... ம்
யானைமுயலுகளும் அன்பானஉடும்புகளு ... ... ம்
சிட்டுக்குருவிகளுஞ் சிறுகுருவிபூங்குரு ... ... வி
மன்னவர்கள்கொண்டிருக்கும் வல்லூறுகுருவிகளு ... ம்

சேரவந்துகூடிநற்ற சேனைகளத்தனையு - - ம்
வேட்டைப்புரவிமேல் வேந்தனுந்தானே - - றி
ஒக்கப்புரவிவிட்டார் உண்டானதோழரெல்லா - - ம்
சேனைமனுவுகளும் திரளும்பரிகலமு - - ம்
மகாசேனைதன்னுடனே மாலைநெறிமுடியா - - ர்

(அம்பலத்தில் இரகசியம்.)

கூடிவருகையிலே கும்பல்கும்பலாய்பேசுகிறா - - ர்
காரிகையாள்மாது கலந்தகாரிசெய்திக - - ளை
தங்களுக்குள்ளேதான் தனித்தனியேபேசலுற்றா - - ர்
ரகசியங்கள்மிகுந்திருக்கு ராஜாக்கள்அம்பலத்தி - - ல்
அந்தரகசியம் அம்பலத்தில்பெருகின - - தே
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிஞ்சின - - தே
தேசத்தழகனவன் திரியோதனன்கேட் - - டு
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக் - - கி
ஏகடியமாதி ஏகாந்தரகசியங்க - - ள்
இரகசியங்கள்நடக்கிறது இராஜாக்கள்அம்பலத்தி - - ல்
அம்பலமெல்லாம் அடர்ந்ததுரகசியங்க - - ள்
தங்களிலேகூடித் தனித்தனியேபேசுகிறா - - ர்
இரகசியங்கள்பெருகிறது நலமானதாதிய - - ரே
பாண்டவர்கள்ஐவரும் படைகூட்டியா - - ரோ
ஆணழகர்பஞ்சவர்கள் ஐவர்வெளிப்பட்டா - - ரோ
கட்டழகர்பாண்டவரின் காலாள்வருகிற - - தோ
தருமராதுதம்பிமார்கள் தனஞ்சயர்கள்வாரா - - ரோ
அம்பலத்துரகசியங்கள் அறிந்துவாதாதியென்றா - - ன்
வீசுங்கவரியனை வேறொருத்திகைக்கொடுத் - - து
படிக்குப்படிகடந்து பாவையிளந்தா - - தி
மாறுகன்அம்பலத்தில் வந்தாளேதாதியவ - - ள்
ஒத்திருந்துகேட்கிறாள் ஒருவருஞ்சொல்லார்க - - ள்
கோணுகமாதவத்து குருக்களடிபணிந்தா - - ள்
யார்பணிதாதிநீ அறியவுனாயுமென்றா - - ன்
யார்பணியுமல்லநான் ஐயாவேஉன்பணிநா - - ன்
தேசத்தழகுமன்னன் திரியோதனன்பணிநா - - ன்
என்னகருமமிது எனக்கறியச்சொல்லுமென்றா - - ள்

அம்பலமெல்லாம் அடையரகசியங்க ... ... ளீ
எழுதரிய அம்பலத்தில் ஏகாந்தமிருந்தசுகு ... ... ஆ
பாண்டவர்கள் ஐவரும் படைகூட்டிவாரு ... ரோ
ஆண்டவர்பஞ்சவர்கள் ஐவர் வெளிப்பட்டா ... ... ரோர
காவலர்கள்பாண்டவரின் காலாள்வருகிற ... ... சோர்
அம்பலத்துரகசியங்கள் அறிந்துவரச்சொன்னார்கா ... ன்ன
என்னகருமமையா எனக்கறியச்சொல்லுமென்று ... ... ள்
அவ்வார்த்தைகேட்டு அங்குருக்களுந்தா ... ... ன்
சொல்லப்பயப்படுவோம் சுந்தரத்தாதிய ... ... ரே
பயப்படுவாருமுண்டோ பார்வேந்தர்அன்னம்உன் ... டு
அரசன்சோறுண்டிருந்து அஞ்சிநடுங்குவதே ... ... ன்
சொல்லுமையாவென்று சோகையிவள்கேட்கையி ... லே
வேறொன்றுமில்லைகாண் வேல்புருவங்கண்ணு ... ளே
அரசாளுந்நாட்டியாள் அல்லித்திருமகளு ... ... ர்
பொன்னுமணியழகர் புலந்திரனார்தேவியற் ... ... கு
காரிழைமாதுநல்லாள் கலந்தாரிநாயகிக் ... ... கு
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதற்கா ... ன்ன
பேடைமலர்க்கண்ணாட்குப் புத்திரனாய்த்தோன்றுதற்கா ... ன்ன
மதுரைதுரைமன்னன் வந்ததுவுங்காணே ... ... மே
அதனாலேகாணுகுது அடர்ந்தரகசியங்க ... ... ள்
தங்களிலேகூடித் தனித்தனியேபேசுகிறா ... ... ர்
அவ்வார்த்தைகேட்டு அடிபணிந்துதாதியவ ... ... ள்
மீளத்திரும்பிவந்தாள் வேல்புருவங்கண்ணாரு ... ம்
தேசத்தழகுமன்னன் திரியனடிபணிந்தா ... ... ள்
ஆதினத்தின்கீழே யடிபணிந்துதெண்டனிட்டா ... ள்
என்னகருமமடி எனக்கறியச்சொல்லுமென்று ... ன்
சொல்லப்பயப்படுவேன் சுந்தரப்பூமுடி ... ... யே
பாவையழகியற்குப் பாவம்வந்தகாரணமே... ... ன்
அரசாளுநாயகியாள் அல்லித்திருமகளு ... ... ர்
அருச்சுனனாரீன்றெடுத்த அழகுபுலந்திரனு ... ... ர்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனார்தேவியற்... ... கு
ஆகாமசக்கை அருமைசக்கையாரிழைக்... ... ... கு
இட்டபடுக்கையிலே எழுந்திருக்கத்தள்ளாதா ... ... ம்
உன்னுள்குளியாளாம் ஒருநேரமுண்பாளா... ... ம்

பந்துபிடித்தறியாள் பள்ளாங்குழியாடா ... ... ள்
சிந்துகவிகேளாளாம் தேனூர்குழலாளு ... ... ..ம்
வேல்புருவங்கண்ணாள் விளையாடச்சம்மதியா ... ... ள்
வண்டார்குழலாட்கு மைந்தராய்த்தோன்றுதகா ... ..ண்
பேடைமலர்க்கண்ணாட்குப் பிள்ளையாய்த்தோன்றுதகா ... ண்
மதுரைவளநாட்டான் வந்ததுவுங்காணோ... ... ..மே
அதனாலேகாணுதையா அப்பலரகசியங்க ... ... ள்
தங்களிலேகூடித் தனித்தனியேபேசுகிறா ... ... ர்

(துரியோதனன் தாதிகளுக்குச்சொல்வது.)

என்றுரைக்கத்தாதி இருசெவியில்காங்கேட் ... ... ர்
தேசத்தழகுமன்னன் துரியோதனப்பெருமா ... ..ன்
கண்டவோராதிகளே கர்னர்செய்தகாரியத் ... ... தை
ஆற்றிலேகாம்பிகந்து அலைந்தொழுகிப்போகாம ... ...ல்
தேர்ப்பாகனென்று சிலபேர்கள்சொல்லாம ... ... ல்
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவேதா ... ..ன்
பொன்னால்மகுடமது பிரபலமாய்நான்கொடுத்... ... து
மாத்திவளர்த்துநான் மகுடமுடிதரித் ... ... ...து
உத்தமனைநானுமிப்போ உள்ளாளாய்வைத்தே ... னே
செகத்திற்புதையாதே சிறுமனைல்பாயா ... ... தே
உத்தமனுமெந்தனுக்கு உபகாரஞ்செய்தா ... ... னோ
தேர்ப்பாகனென்றுஇங்கே செரியவேவேண்டு ... மோ
சமயமுதலிகளைச் சாமார்த்தியமந்திரிக ... ... ளை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத் ... ...து
சேரவிடைகொடுத்துச் செம்பொன்முடியானு ... ம்
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங் ... ... கி
ஆலாத்திக்காரோடே அரண்மனைபோய்ப்புகுந்தா ... ...ர்
தாமக்கருங்குழல்மார் தாதியர்கள்மூப்பியரு ... ... ம்
காலுக்குநீர்கொண்டு காரிகைமார்வந்தார்க ... ...ள்
சிங்காதனமிட்டார் தேனூர்குழலார்க ... ... ள்
இட்டதொருஆதீனத்தில் இருந்தானேதார்வேந்த ... ...ன்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளெங்கேயென்று ... ன்
நீலக்கருங்குழலாள் நீலமுத்துமண்டபத்தி ... ... ..ல்
கிளிமொழியாள்தங்களுடன் கேளிக்கைபார்க்கிறா ... ள்
மாதுஇருக்குமந்த மண்டபத்திற்போய்ப்புகுந்தா ... ன்

நாலாங்கடுந்திரளார் நூற்றொருவர்தேவியர்க ... ... ... ள்
படைத்துணைஞர்வாழ வரவுகண்டுமங்கையர்க ... ... ... ள்

(பெருந்திருவாள்-சூரியோதனனைக்கண்டது.)

சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங் ... ... ... கி
மார்களெல்லாரும் மறைவாகப்போனார்க ... ... ... ள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த் ... து
எதிரோநடந்துவந்து ஏலங்குழலாளு ... ... ம்
மாளுகங்கொண்டீரோ மதியற்றுப்போனீ ... ... ரோ
ஆடரவங்கொண்டீரோ அறிவழிந்துபோனீ ... ... ரோ
தம்பிமார்தேவியென்று சத்துருமதியாம ... ... ல்
வாருமென்றுசொல்லி மணிக்கரத்தைதான்பிடித் ... ... து
பள்ளியறைப்பண்டபத்தில் பைங்கிளிடங்கொண்டுசென் ... று
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுவா ... ள்
தருமமுடியாமோ தனித்துவரக்காரியமெ ... ... ன்
எல்லைகருமமிது எனக்கறியச்சொல்லுமென்றா ... ள்
(அடி) கண்டாயோயாமேநீ கர்ணர்செய்தகாரியத் ... தை
(அரே) ஆற்றில்மிதந்து அலைந்துஅழுகாம ... ... ல்
தேர்ப்பாகனென்று சிலபேர்நகையாம ... ... ல்
பிள்ளைக்குப்பிள்ளையாய் பெரியபிள்ளையாகவென் ... று
மாத்துவளர்த்தேனே மகுடமுடிதரித் ... ... து
உத்தமனென்றே உலகமெங்கும்பெயருமிட் ... ... டு
என்றுபின்னுமைக்க எந்நிலையுங்கூறுவா ... ... ள்
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுகிறா ... ள்
இந்த ராஜ்யமிருந்துஅரசாண்டோ ... ... மே
சுந்தரப்பூமுடியார் துரோகமொன்றுஞ்செய்ததில் ... லை
எல்லைவினைசெய்தாரோ எனக்கறியச்சொல்லுமென்றா ... ள்
அந்தமொழிகேட்டே யரசன்விளம்பலுற்றா ... ... ன்
சுந்தரப்பூமுடியான் சொல்லுவான்வார்த்தையொன் ... று
சேனையயிலே கிரீடமுடியன்றெடுத் ... ... து
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரனா ... ... ர்
ஆரத்துவாழ்மார்பன் அவருடையதேவியா ... ... ளை
காரிற்குழலாள்மாது கலந்தநாயகத் ... ... தை
என்னுடையகோட்டையிலே இளங்கொடியைவையாம ... ல்
(அவள்) [illegible] ... ல்

தன்னுடையகோவிலிலே தையலாளைவையாம ... ல்
லேறேயொருகோட்டை வேருகவிடுகட் ... ... டு
மாதினதுகோட்டைக்கு மறுபடியும்போனதில் ... லை
நாலாலகழிந்திரளார் நூற்றுவரும்போனதில் ... லை
கற்கோட்டைமுகத்திலேயங் காவலனுந்தன்னுதென் ... று
வாசலுக்குக்காவல் வாள்வீரர்சூழ்ந்துநிற் ... க
இரவும்பகலுமா யிளங்கொடியாள்தன்னுட ... னே
மருவியறவாடியே மைந்தன்கெற்பமாச்சு ... ... து
பின்னைகெற்பமானாள் பெருந்திருவாள்நாயகி ... ... யே
என்றமிகவரசன் எந்திழைக்குச்சொல்லுகையி ... ல்

(பெருந்திருவாள்சொல்லுகிறது.)

போடமலர்க்கண்ணாள் பெருந்திருவுங்கூறுகிறா ... ள்
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியில்கையைவைத்தா ... ள்
அராகராவென்றுசொல்லி ஆரணங்குமுத்துதிர்த்தா ... ... ள்
நம்முடையகர்ணனை நாம்சொல்லக்காரிய ... மோ
இந்நாளுமதியுடன் இருந்துஅரசாண்டோ ... ... ம்
சுந்தரப்பூமுடியான் துரோகமொன்றுஞ்செய்ததில் ... லை
(அவளை) தாயார்முலைகொடுத்துத் தந்தையாய்ச்சீராட் ... டி
மாராணைமேலே வளர்க்கவைத்தார்தாதிய ... ... ரை
ஏறிட்டுப்பாராரோ இந்நாளுமிராசமன்ன ... ... ன்
நாடகசாலையிலும் நாயகிமாராடிவந்தா ... ... ல்
சங்கைதமக்கையென்பார் தையலர்களியாவரையு ... ம்
(கண்) பாசமேகண்ணுகப் பார்த்திருப்பான்புகழ்வீர ... ன்
கர்ணனைச்சொல்லுகிற காரியமோவித்தனையு ... ... ம்
மன்னவனைச்சொல்லுகிற வார்த்தையோயித்தனையு ... ம்
அங்கவளநாட்டார் அவர்முன்னேசொன்னக்கா ... ல்
ஆயுதத்தால்தன்னுயிரை அழித்துகொள்வார்ஆணழக ... ன்
மெல்லிபரும்நாளுமாய் விசாரித்துவாறுகிறே ... ... ன்
என்றுரைமென்று இளங்கொடியும்ஆணையிட்டா ... ள்

(கர்ணர்வருகிறது.)

காசிலிவரீணர் கர்ணரவர்வாராரா ... ... ... ம்
ஆதித்தன்புத்திரனூர் அங்கவளநாட்டழக ... ... ன்
கெங்கையிலேவந்த கீர்த்திப்பிரதாப ... ... ன்
வையபெருவீர வந்தவன்காண்கர்ணரவ ... ... ர்

வேட்டைகளாடிவாரார் வேந்தர்பெருமானு ... ... ம்
வெள்ளித்தடிக்காரர் வீரியமாய்ச்சூழ்ந்துவ ... ... ர
துள்ளும்படைவீரர் துடிப்புடனேசூழ்ந்துவ ... ... ர
நாகசுரமேளம் நவுரிகளதிலேறா ... ... த
கோணற்கொம்பூதுவார்கள் கொற்றவனார்வீரியற் ... கு
ஊதினார்சின்னம் உலகேழுந்தானறி ... ... ய
விருதுக்குழலை மெல்லியருங்கேட்டிருந்தா ... ... ள்
வந்துகுறுகினார் மாறுகனைப்பலத்தி ... ... ல்
ஏறிட்டுப்பார்த்தார்கன்னி இராசாவினம்பத் ... ... தை
தான்வந்துகொலுகலைட்டேபன் நாள்தோறுமம்பலத்தி ... ல்
இன்றுகொலுக்கலைந்தது ஏதோகருமமி ... ... து
மாறுகணம்பலத்தில் வந்துகுறுகினா ... ... ர்
வேட்டைப்பரிகலமும் வேந்தனதுசேனைகளு ... ம்
சேரவந்துகூடிற்று சேனைகளத்தனையு ... ... ம்
அங்கவளநாடாளும் அதிகனார்வீரியனு ... ... ம்
பங்கிட்டுக்கொண்டார்கள் படைமன்னர்சேனையெல்லா ... .. ம்
சமயமுசலிகளைச் சம்பந்தமந்திரி ... ... யை
அங்கவரையெல்லாம் அனுப்பிவிடைகொடுத் ... ... து
பாடும்புலவருக்கும் பட்டருக்குஞ்சித்தருக்கு ... ம்
தேனல்லோசாரணவன் தியாகங்கள்தான்கொடுத் ... து
அங்கவரையெல்லா மனுப்பிவிடைகொடுத் ... ... து
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங் ... ... கி
ஆலாத்திகொண்டுவந்தார் ஐம்பாயிரந்தாதியர்க ... .. ள்
முத்தாலேஆலாத்தி மூன்றுமேசுத்திவிட்டா ... ... ர்
பவழத்தால்ஆலாத்தி பத்துநூறாயிரமா ... ... ம்
புரவிவிட்டுத்தானிறங்கி பொற்கருணர்தானடந்தா ... ர்
ஒற்றைத்துரைகளுடன் உண்டானதோழருமா ... ... ய்
கைதட்டித்தானடந்தார் காவலர்களெல்லோரு ... ம்
தருமமுடியான் தலைக்கட்டிற்போய்ப்புகுந்தா ... ன்
தாமக்குழலார்கள் தாதிமார்எதிரிற்கண் ... ... டு
காலுக்குநீர்வார்த்தார் காவலனார்வீரியற் ... ... கு
பாவையழகியரும் பட்டாலடிதுவட் ... ... டி
ஆதினைப்போட்டார்கள் அங்கிருக்குந்தாதியர்க ... ... ள்
இட்டதொருஆசனத்தில் ஏறுமல்லன்னவனு ... ... ர்

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாளெங்கேயென்று ... ர்
மாணகவேந்தர் மன்னவருமெங்கேயென்று ... ... ர்
ஏகாந்தம்பேசுகிறார் இருவரும்பள்ளிய ... ... றா
நான்வந்தேனென்று நாயகமேசொல்லுமென்றா ... ர்
பெருந்திருவாளண்டையிலே பொற்கொடியுமோடிவந் ... து
ஆதினத்தின்கீழ் அடிவணங்கிதெண்டனிட்டா ... ர்
வந்துபணிந்தவரை வாழ்த்தியந்தமன்னவரு ... ... ம்
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டு ... ... ம்
நிற்பீர்நிலைசிறப்பீர் நீரரசையாண்டிருவீ ... ... ர்
என்றுமிகவாழ்த்தி என்னடிகாரியமென்று ... ... ன்
கருணர்வந்தாரென்று கட்டழகிசொல்லுகையி ... ல்
வரச்சொல்லுமென்றுரைத்தாள் மாதுபெருந்திருவா ... ள்
தாதியவளோடிவந்து தையல்வரச்சொன்னாள்கா ... ண்
அவ்வசனங்கேட்டு ஆணழகன்உள்ளுநுழைந்தா ... ... ன்

[கர்ணர் பெருந்திருவாளைக்கண்டது.]

பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்தன்னடிக் ... கே
ஆதினத்தின்கீழ் அடிவணங்கிதெண்டனிட்டா ... ர்
வந்துபணிந்தவரை வாழ்த்தினள்மன்னவ ... ... ரை
வாழ்வீர்வளருவீர் மண்ணூழிகாலமட்டு ... ... ம்
நிற்பீர்நிலைசிறப்பீர் நீரரசையாண்டிருவீ ... ... ர்
நீரோயரசாள்வீர் நீடூழிகாலமெல்லா ... ... ம்
இருவர்நடுவாக இருத்தியந்தராசா ... ... வை
யறிட்டுப்பார்த்தார்கள் இவருடையதிருமே ... ... னி
வாடியிருப்பானேன் மன்னருடதிருமுகங்க ... ... ள்
விடாய்பட்டிருக்குது வேந்தர்திருமே ... ... னி
கட்டித்தயிருகளுங் காவடியில்அன்னமு ... ம்
பானக்கம்நீர்மோரும் வரவிட்டேன்பார்வேந் ... தா
விடாய்த்துநீமண்டபத்தை வேந்தனேவரவிலை ... யோ
எந்தவழிவந்தீர் என்றாள்பெருந்திருவா ... ... ள்
ஆச்சிதானந்த அவ்வழியாய்வந்ததில் ... ... ...லை
மற்றுமொருவழியே வந்தேநான்ஆச்சிய ... ... ரோ
மாலைமுடியானே நீர் வருவதற்குமுன்பா ... ... க
ஆரப்பசிக்குதென்று அரவக்கொடியாரு ... ... ம்
மெத்தப்பசிக்குதென்று வேந்தர்பெருமானு ... ... ம்

ஆனந்தவாழ்மார்பர் அடிசலுக்குத்தான்வந்தா ... ... ர்
மாலைமுடியாரோநீ வந்ததொருசெய்திகண் ... ... டு
தாமிஷிமாய்நின்றேன் தனஞ்சயர்களிருவருமா ... ய்
மஞ்சணீராடிவர மன்னையிருவருமா ... ... ய்
ஆனந்தமாய்நீங்கள் அடிசலுக்குவாருமென்று ... ... ள்
சிங்காசனத்தைவிட்டு திகழக்குதித்திறங் ... ... கி
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த் ... ... து
மஞ்சணீர்சாலையிலே மன்னவர்கள்போய்புகுந் ... து

[துரியோதனனுங் கர்னருங்கூடினது.]

ஆனைபணிகழட்டி ஆனந்தவாழ்மார்ப ... ... ன்
தனையாப்பணிக்கலை நாயகமார்தான்கழட் ... ... டி
மாலைமுடியாரும் மஞ்சள்நீராடு ... ... ... டி
சாத்துபில்கலைந்து இழைசேர்ந்தபட்டுடுத் ... ... தி
தூவட்டங்கொண்டு துவட்டியசுந்தரர்க ... ள்
ஆனைபணிபூட்டி ஆனந்தவாழ்மார்ப ... ... ர்
தேனல்லோசாரர் திருநீறுக்காப்புமிட் ... ... டு
செந்தூரப்பொட்டுமிட்டு சிவனையடிபணிந் ... ... து
பூசைபண்ணுமண்டபத்திற் போனாரிருவருமா ... ய்
நித்தியபடிதானங்கள் நிறையவேதான்கொடுத் ... ... து
செம்பொன்முடியாரும் செப்பகந்தான்முடித் ... து
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைகோர்த் ... ... து
அமுதுண்ணும்மண்டபத்தை அலகிட்டுநீர்தெளித் ... து
எங்கும் அலகிட்டு எத்திசையும்நீர்தெளித் ... து
பூமியோடொத்ததொரு பொற்றடுக்குதான்போட்டா ... ர்
பொற்றடுக்குமேலே புகழ்வீரர்வீற்றிருந்தா ... ... ர்
சிங்கமுகக்காலிவைத்து செம்பொன்தளிகைவைத்தா ... ள்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பு ... ம்
பொரிச்சக்கறியுடனே புத்துருக்குநெய்வார்த்தா ... ... ர்
கூட்டிப்படைத்தாள் கொம்பேரிடையாளு ... ... ம்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பா... ... ... டு
அத்தளிகையுண்டபின்பு மத்தளிகையுண்டார்க ... ... ள்
நித்தப்பால்வார்த்து நிறையவேசக்கரையு ... ... ம்
கைபூசிக்கொண்டு கனகமணிமண்டபத்தி... ... ...ல்
தாமக்கருங்குழலார் தாதியருமேப்பியரு ... ... ம்

வாய்த்தவிலைச்சுருளும் வர்ணப்பழக்காயு ... ... ...ம்
வாங்கியமுது செய்து மன்னரிருவருமா ... ... ய்
அந்திக்கொலுசமயம் ஆச்சுதுகாணந்நேர ... ... ம்
ஆபரணந்தான்பூண்டு அழகியபட்டுடுத் ... ... தி
சுந்தரப்பூமுடியார் தோழனையுங்கைக்கோர்த் ... து
ஆநந்தவாழ்மார்பன் அம்பலத்தில்தான்போன ... ... ர்
சேரக்கொலுவில் சிங்காதனமிருந் ... ... து
வந்தெதிரேகண்டார்கள் மாலைமுடியா ... ... னா
காசிலிவர்ணர் கர்ணர்பெருமாளு ... ... ம்
இருமிருமென்று இணைக்கடகக்கையமர்த் ... ... தி
சிங்காசனத்திலே சேரவிருந்தார்க ... ... ... ள்
எதிரிருந்தார்கள் எழுமணிசிங்காதனத்தி ... ... ...ல்

(துரியோதனன்-கர்னனைக்கேட்கிறது.)

தேசத்தழகுடமன்னன் துரியோதனப்பெருமா ... ன்
கர்னனைத்தான்பார்த்துக் கடடனெடுத்துரைப்பா ... ன்
மாளுகைக்கொடிவேந்தன் மன்னன்முகம்பார்த் ... ... து
(நீ) பெருகிறஆற்றிலே பேராற்றிற்போகாம ... ...ல்
ஆற்றில்மிதந்து அலைந்துஅழுகாம ... ... ல்
சேற்றிலழுந்தாதே சிறுமணல்பாயா ... ... தே
தேர்ப்பாகனென்று தெரிந்துமிகச்சொல்லா ... ... தே
பிள்ளைக்குப்பிள்ளையாய்ப் பெரியபிள்ளையாகவுன் ... னை
மாத்திவளர்த்தேனே மகுடமுடிசூட்டியுன் ... ...னை
மன்னனென்றுபெயருமிட்டு மண்ணாளவைத்தே ... னே
உத்தமனாய்செய்து ஊராளவைத்தே ... ... னே
உபகாரமெத்தசெய்தாய் உற்றதொருதேர்ப்பா ... ...கா
என்றுமிவனுரைக்க எடுத்துமிகவுரைப்பா ... ... ர்

(கர்ணர்சொல்வது.)

காசிலிவர்ணர் கர்ணருங்கூறுகிறா ... ... .. ர்
(என்னைப்) பெட்டியிலேவைத்ததுவும் பேராற்றில்விட்டதுவு .. ம்
தேர்ப்பாகன்றன்கையிலே சிக்கியகப்பட்டது ... ... ம்
(என்னை) மாத்திவளர்த்து மண்ணாளவைத்ததுவு ... ... ம்
அறியாரோவிந்நாட்டு அம்பலத்துச்சேனையெல்லா ... ம்
இதுபேச்சுசொல்லுவோ இந்தச்சபைநடு... ... ...வே

சொல்லவேவேணுமோ சுந்தரப்பூமுடியா ... ... ள்
இந்நாளுநதியா யிருந்தோம்அரசாண்டோ ... ...ம்
சுந்தரப்பூமுடி நான் துரோகமொன்றுஞ்செய்ததில் ... லை
இந்நாளுமில்லாதிப்போ தென்னவினைசெய்தேன்யா ... ன்
சுந்தரமோசொல்லாமல் சுட்டால்தெரிவதுண் ... டோ
தீயினாற்சுட்டபுண்ணு சீக்கிரத்திலாறிவிடு ... ... ம்
